www.tamilarangam.net

# நிலா
# Nila

mars avril 1998



Un magazine bimestriel

இரு மாதத்திற்கு ஒரு முறை வெளிவரும் தமிழ் இதழ்

7F

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# OULLANGAÏ

## Kîlvélour - 98

# Nos cartes sont là !



*pour vos voeux de Bonne Année ...*

*... ou bien ...*





*... pour vos messages d'amitié ...*

*... ou simplement pour nous aider à réaliser le projet*

**OULLANGAÏ - Kîlvélour 98**

*c'est à dire construire leur école ...*



## La collection de 4 cartes 50 Francs

Association régie par la Loi du 1er juillet 1901

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பவுர்ணமி 5 Mars - Avril 1998



நிலா

*எண்ணிய முடிதல் வேண்டும்*
*நல்லவே எண்ண வேண்டும்*
*திண்ணிய நெஞ்சம் வேண்டும்*
*தெளிந்தனல் லறிவு வேண்டும்*

- பாரதியார்

# இந்த இதழில் உள்ளே


1. அன்புடையீர் 4

**2. CULTURE: Onam, la fête.....** 5

3. கெடுவான் கேடு நினைப்பான் 8
ஹரஹரி

4. கவிதை: உணர்ந்ததினால்.. கிருஷ்ணா 9

5. தேவன் கோயில் மணியோசை - எல்லெஸ் 10

6. சிறுகதை: இலவு காத்த கிளிகள்- நாயகன் 11

7. வேலைக்கு ஆள் தேவை நாடகம் - G. திமோன். 13

8. புதியதோர் உலகம் செய்வோம் கோ. செயராமன் 14

**9. Provinces des Indes Karnataka 15**

10. மகளிர் மட்டும் - பெண்கள் பகுதி. 16

11. நான் ஒரு சங்கத் தமிழன் கட்டுரை பாலகிருட்டிணன் 19

**12. Salut les jeunes 20**

13. பொங்கி வரும் பெரு நிலவு - தொடர் கதை - கிருஷ்ணா 22

14. நாட்டு நடப்பு 24

14 சினிமா சினிமா 33


கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. கதை கட்டுரைகளை திருத்தவோ, சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு

தாமதமாக வரும் கதை, கட்டுரைகளை பிரசுரிக்க இயலாது

அனுப்ப வேண்டிய முகவரி:


Nagarathinam krishna
38, boulevard Balzac
67200 STRASBOURG
Fax: 03 88 32 83 93



ஆசிரியர்:

நாகரத்தினம் கிருஷ்ணா

துணை ஆசிரியர்கள்:

கியோம் திமோன்
லூர்து நாதன்



**பத்திரிகை விளம்பரங்களுக்கு தொடர்பு கொள்க:**

**Nagarathinam**
**38 boulevard Balzac**
**67200 STRASBOURG**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அன்புடையீர்...!

## வாஜ்பய்க்கு ஒரு வார்த்தை

இந்திய அரசியல் தலைவர்களில் நேர்மை, கண்ணியம், அறிவுத்திறன் மற்றும் செயல்திறன், நீண்ட நிர்வாக அனுபவம் அனைத்தும் ஒருங்கே பெற்றவர் திரு. வாஜ்பய் அவர்கள்.

இனி இந்தியாவில் கூட்டு ஆட்சி என்பது தவிர்க்க முடியாது. தனியொரு கட்சி அறுதிப் பெரும்பான்மை பெறும் என எதிர் பார்ப்பதற்கில்லை. ஒரு கண்ணியம் கருதி, நாட்டு மக்களினின் நலனில் அக்கறைக் கொண்டு பெரும்பான்மை பெறும் கட்சியை ஆட்சிக் கட்டிலில் அனுமதிப்பது அவசியம். குறிப்பாக காங்கிரஸும் ஐக்கியமுன்னணியும் இதனை உணர்ந்தாக வேண்டும்.

இன்னொருபக்கம் ஜெயலலிதா என்ற விஷப்பாம்பு. பாம்பு படமெடுத்தால் அழகாகத்தான் இருக்கும் அதற்காக பக்கத்தில் வைத்துக் கொண்டு கொஞ்ச முடியாது. என்றைக்கு இருந்தாலும் அது விஷம் கக்கும் என்பது நிச்சயம்.

இந்த நிலையில் வாஜ்பய் எத்தனை நாளைக்கு என்பது கேள்வி?

அதற்கு பதில் சொல்ல வேண்டியவர்கள் மக்களேயன்றி, மேலே குறிப்பிடப் பட்டவர்கள் அல்ல. ஆனால் அதற்கு முன் வாஜ்பய்க்கு ஒரு வார்த்தை. அவர் இந்தியர்களின் பிரதமரேத் தவிர இந்துக்களின் பிரதமர் அல்ல என்பதை இறுதிவரை உள்ளத்தில் கொள்ளவேண்டும். ஜெயலலிதா போன்றவர்களின் பூச்சாண்டிகளுக்கு பயப்படவேண்டாம். சிறுபான்மை மக்களுக்கு பாரதீய ஜனதா அரசு விரோதமானதல்ல என்பதை நிரூபித்தாக வேண்டும். செய்யுங்கள்!

நிச்சயம் நீங்கள் கனவு காணும் பாரதம் உருவாகும்.

ஆசிரியர்

www.tamilarangam.net



# CULTURE



*Haut relief de la caverne 2 à [illegible] VIe au VIIe siècle*

***Au retour des parfums et à la fin de la mousson correspond le festival des fleurs, Onam . Pour tous les Keralais, c'est l'occasion pendant dix jours de danser au rythme des mélodies de la nature. Onam comme la plus part des autres fêtes en Inde, permet à la liesse populaire de s'exprimer. Elle représente une formidable aubaine tant pour la survivance d'un certain nombre de formes d'expression populaires... que pour les visiteurs. Cette fête keralaiste coïncide avec le Nouvel An du calendrier malayalam.***

## Le mythe de Maveli

Onam évoque les doux souvenirs de l'âge d'or mythique durant lequel l'assura et roi Mahabali ou Bali, souverain loyal et de grande sagesse, régnait sur la région avec pour capitale Mahabalipuram, sur la côte de Coromondel. Si l'on en croit la légende, Mahabali que ses sujets désignaient affectueusement sous le nom de "MAVELI" était très gentil, fidèle et magnanime. Durant son règne, la population menait une existence des plus heureuses: la justice, la paix et l'abondance régnaient dans le pays qui ne connaissait ni sécheresse, ni inondation, ni famine, ni épidémie, ni voleurs, ni malfaiteurs. Cette situation idéale sur terre et le désir de Mahabali de conquérir de surcroît le ciel et l'atmosphère suscitaient l'appréhension et l'anxiété des dieux. Ceux-ci craignaient en effet de perdre leur suprématie et leur réputation au sein de la population à l'égard de laquelle Mavelli se montrait si bienveillant et rempli d'égards. A la demande de Kasyapa et d'Aditi, la mère des dieux, le Seigneur Vishnou fut chargé de déloger l'assura et de libérer les trois mondes tombés sous son emprise. Pour ce faire, le Seigneur Vishnu, qui avait pris la forme du nain brahmane Vamana, s'arrangea pour rencontrer Bali au lieu sacré où il officiait, à l'occasion de l'Asvamedha yaga - le sacrifice du cheval.

# ONAM, la fête régionale du Kerala

Son comportement et ses propos plurent tant à Bali que celui-ci demanda au nain ce qu'il désirait. Vamana demanda à Bali de lui donner autant d'espace que trois de ses pas pourraient couvrir. Bali accéda à sa demande. Mais il n'avait pas plutôt commencer à verser de l'eau sur les mains du nain pour ratifier son don que Vamana prit une forme démesurée et en deux enjambées franchit l'univers tout entier. Homme de parole, Maveli proposa au nain sa tête pour exécuter son troisième pas. Vishnu posa son pied sur la tête de Maveli et le projeta dans le Pathala, le monde inférieur. Mais avant cela, il accepta l'honnête requête de Mavali qui consistait à pouvoir revenir chaque année voir ses sujets. Ainsi, Mavali , muni de son parasol en feuilles de palmier, reviendrait chaque année, au Kerala le troisième jour d'Onam.

La fête d'Onam rend hommage au sacrifice de Mahaveli. En souvenir des jours heureux passés sous le règne de ce loyal souverain, les keralais reconnaissants, célèbrent

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



annuellement son retour parmi eux avec toute la pompe qui convient à l'occasion. C'est avec une vieille chanson qu'ils accueillent Maveli:

"Quand Maveli régnait sur la terre
Tout le monde était égal
Tous vivaient dans la joie
Le danger ne guettait personne
Il n'y avait ni vol ni déception
Personne ne s'adonnait aux mensonges
Les poids et mesures étaient tous justes
Personne n'essayait de tricher ou corrompre
l'autre"

La popularité de la fête d'Onam s'accrut après l'établissement d'un temple dédié à Vamana à Thrikakkaara près de cochin. Il pourrait dater du 8ème siècle. Certains historiens attribuent l'origine de la fête à l'Assyrie. La croyance veut que les prédécesseurs des Dravidians aient émigrés en Inde de cette contrée et que Mahabali ait été l'un de leurs illustres souverains.

## Les Célébrations

Onam...c'est l'occasion de nettoyer de fond en comble les maisons et autres édifices, ainsi que leurs périmètres. Chacun repeint son intérieur tandis que les enfants s'adonnent à la décoration de la cour en composant à l'aide de fleurs de superbe tapis sur la bouse de vache séchée et étalée dans la cour des maisons. Parmi les fleurs aux subtils parfums, nous citerons la petite fleur blanche, la thumpa.

La fête d'Onam débute par la réception, haute en couleur du roi Mahabali. Des effigies à l'image de Mahabali et Vamana ou Vishnu sont façonnées dans de l'argile et disposées dans la cour des maisons.

Il est intéressant de noter que durant Onam, les Keralais vénèrent avec la même ferveur le roi Bali mais aussi Vishnu qui l'a pourtant délogé et chassé vers le monde inférieur. Cette addition tardive pourrait remonter à la période Vaishnava.

Après les prières et rituel traditionnels, un banquet est organisé, aussi somptueux et plantureux que le permettent les moyens individuels. Les plats servis à l'occasion d'Onam ont d'une saveur particulière. Des chips de bananes, diverses variétés de Payasams (entremets sucrés) des papadams (fines galettes à base de farine de lentilles noires), du paruppu ( lentilles) et de l'avial(plat de légumes ) sont les mets qui invariablement composent le menu d'Onam (Onam Sadya). Traditionnellement, Les mets sont servis sur des feuilles de bananiers.

Onam coïncide avec la saison des récoltes du paddy(riz non décortiqué et la cueillette des bananes. Une excellente occasion de resserrer les liens d'amitié et d'organiser des réunions de famille.

### Semaine touristique

L'heure est à la danse et aux activités sportives. Au kerala, la semaine d'Onam est également considérée comme la semaine du tourisme. Sous les auspices du Gouvernement de l'état du Kerala, des manifestations culturelles sont organisées dans l'ensemble de l'état du Kerala : régates de bateaux serpents ou "Vallam Kali" à Punnamada kayal(Allepy), à Aranmulla, sur les rives de la pamba, à Champakulam et à Kottayam , spectacles folkloriques, véritables vitrines du patrimoine culturel destinées à attirer les visiteurs indiens et étrangers vers le paradis touristique que constitue le Kerala et ses lagons bordés de palmiers.




Chaque bateau appartient à un des village qui bordent la Pamba. Ils font l'objet d'un entretien annuel consistant à appliquer sur leur coque un enduit préparé à partir d'huile de poisson, d'oeufs et de charbon de noix de coco brûlée. Les bateaux "Shuntant vallam" mesurent quelque 40 mètres de long. Ils sont rapides et faciles à manoeuvrer. Une centaine de personnes peuvent contenir à leur bord : rameurs, barreurs, chanteurs, musiciens. Ces bateaux sont décorés

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



d'ombrelles de soie rouge et verte agrémentées d 'éléments dorés.



Il existe d'autres catégories de bateaux comme l'Odi ou Iruttyukuthi, pouvant contenir de 40 à 50 rameurs, le churula pour une trentaine de personnes(généralement manoeuvré par des femmes le jour de la course).

Dans les villages, des clubs organisent des jeux et des concours culturels. Les hommes jouent " talapandu"(sort de football), au "thallu" (lutte) et au "pulli kali"( jeu du tigre et de l'ours). Les femmes de leur côté, jouent à des jeux tels que "kaikotti", "kali" et "kummi. Vêtues de leurs plus beaux vêtements, elles chantent et dansent, notamment une danse du nom de "kyekuttikali". Les artistes locaux ont par ailleurs souvent l'opportunité de présenter leurs oeuvres.

Si Onam a un tant soit peu perdu de son charme ancien. Il reflète néanmoins la prédilection des Keralais pour la vie paisible et la cohabitation harmonieuse, loin des conflits, de la haine et des tensions. Onam est le symbole de la prospérité, du bonheur, de la fraternité et de l'harmonie intercommunautaire. En effet, cette fête est célébrée tant par les Hindous, que par les Musulmans et les Chrétiens et représentent les espoirs et les aspirations de tous les Malayalis.

# VOS DROITS

## TELEPHONE

Une résolution européenne de 1993, entérinée en France par une loi du mois de juillet 1996 a appelé à la libéralisation des services de téléphonie vocal au 1 janvier 1998. Pour des raison techniques, France Télécom assurera seul les appels locaux. Les longues distances nationales et internationales, peuvent théoriquement être assurées par d'autres opérateurs. dans la pratiques, seuls France Télécom et Cegetel ont dévoilé leurs offres.

**Pour téléphoner....**

Si vous conservez votre abonnement à France Télécom rien ne change.

Si vous souscrivez d'autres abonnements et que vous téléphonez:

- Dans votre département, vous ne changez rien à vos habitudes: Composez le 0 puis l'indicatif régionale et le numéro de votre correspondant.

- Hors de votre département, vous devez d'abord composer le préfix d'opérateur auquel vous avez souscrit un abonnement. Puis l'indicatif régional instauré depuis l'année dernière. Et enfin, composez le numéro de votre correspondent.

- A l'étranger, vous deviez auparavant faire 00, vous ferez à présent l'indicatif de l'opérateur de votre choix ( 9,8,7,5 ou 2) puis le 0, ce qui donnera 90,80,70,50 ou 20 puis le numéro de votre correspondent.



மதாம் 1: என்ன உங்க மிஸியே புள்ளைக்கு மதியத்துல கல்யானத்த வைச்சுட்டாரு.
மதாம் 2: இந்தியாலே காலங்காத்தாலே கல்யாணத்தை வச்சு எனக்கு தூக்கத்துல தாலி கட்டிட்டாராம். பையனாவது முழிச்சுகிட்டு தாலி கட்டட்டுமேன்னுதான்..

மதாம்1:..! !

www.tamilarangam.net



# நீதிக்கதைகள்: 5

## ஆராய்ந்து அறிதல் அல்லது கெடுவான் கேடு நினைப்பான்

ஹரஹரி

ஒரு காகமும், ஒரு மானும் இணை பிரியா நண்பர்களாக வாழ்ந்து வந்தனர். காலையில் இரைத் தேடிச்சென்று மாலையானதும் ஒரு மரத்தின் கீழ் ஒன்றாகச் சந்தித்து அன்றைய நாளில் நடந்த தாங்கள் பார்த்த நிகழ்ச்சிகளைக் கூறி இருவரும் கலந்துரையாடிக் கொள்வதுண்டு. ஒருநாள் மாலை அப்படி இருவரும் பேசிக்கொண்டிருந்த போது, நரியொன்று கவலையோடு வந்தது.

காகமும் மானும், நரியாரே ஏன் கவலை, விருப்பமிருந்தால் எங்களிடம் சொல்லலாமே, ஏதாவது தீர்வு காணலாம்" என்றன.

"எனக்கென்று யாரும் இல்லை, நான் தனியாகவே இருக்கிறேன். உங்களைப்பார்த்து உங்களோடு நட்பு கொள்ள முடியுமா என்று வந்தேன்", என்று நரி சொன்னது.

"ஆஹா அதற்கென்ன, நாங்கள் இரண்டு பேர் இருந்தோம், இன்று முதல் மூன்று பேராக இருப்போம்" என்றன காகமும் மானும்.

உடனே நரியானது, " மிக்கச் சந்தோஷம், எங்கள் முன்னோர் செய்த புண்ணியம்தான் என்னை உங்களிடம் நட்பு கொள்ள செய்தது. நான் ஒரு நல்ல செய்தி சொல்கிறேன், நான் வரும் வழியில் உள்ள வயல்களில், நல்ல பச்சை பசேலென்ற புற்களும், நத்தைகள், தான்யங்கள் போன்றவையும் இருப்பதைக் கண்டேன். நீங்கள் இரை தேடி ரொம்பவும் அலைய வேண்டியதில்லை. அங்கே போனால் வேண்டுமளவு உண்ணலாம்" என்றது.

அந்த இடம் ஒருவனுக்குச் சொந்தமானது, அதற்குக் காவல்காரனும் உண்டு. அவன் பயிர்களை அழிக்கும் மிருகங்களுக்காக வலையும் பின்னிவைத்துள்ளான். நரிக்கு இது தெரிந்தும், அவைகளுக்கு ஆசை மூட்டியது. ஏனென்றால், ந. ரி வெகு நாட்களாக மான் இறைச்சி உண்ணவேண்டும் என்ற நப்பாசை. அதனாலேயே நட்பு கொண்டு மானை வேட்டையில் சிக்கவத்து, மிஞ்சிய இறைச்சிகளை போடும்போது நன்றாக உண்ணலாம் என்ற ஆசை.

இதை அறியாத மானும், மகிழ்ச்சி கொண்டு அடுத்த நாள் எதுவும் சிந்திக்காமல் நரி சொன்ன வயல் வெளியில் மேய்ந்தபோது வேடனின் வலையில் சிக்கிக் கொண்டது. அப்போதும் அது நரியின் சூழ்ச்சியை எண்ணிப் பார்க்கவில்லை.

மாலையில் மானைக் காணாது தேடிவந்த காகம், மான் வலையில் சிக்கியிருப்பதைக் கண்டு அதன் அருகில் சென்று, " இது நரியின் சூழ்ச்சியால் ஏற்பட்டதே யன்றி வேறில்லை. அதன் தந்திரம் தெரியாது நட்பு கொண்டது எவ்வளவு தவறு" என்று எடுத்து கூறியது. மானும் அதன் அறியாமையை என்னி வருந்தியது.

காகம் உடனே மானிடம்," வேடன் திரும்பி வரும் மாலை நேரம் நெருங்கிற்று நாம் உடனே நம் புத்திசாலிதனத்தால் தப்பிக்கவேண்டும், நரியும் உன் இறைச்சியை உண்ணவேண்டி எங்காவது மறைந்திருக்கலாம். நீ இறந்தாற்போல கால்களை விறைத்து, கண்களை மூடிக்கிட, நான் உன்மேல் அமர்ந்து உன்னைக் கொத்துவது போலச் செய்வேன். வேடன் நீ இறந்துவிட்டாய் என்றெண்ணி வலையை அவிழ்த்து வைக்கப் போகும்போது நான் கா.. கா. என்று கரைவேன். நீ உடனே ஓடி தப்பித்துவிடு என்றது.

அதன்படியே வேடனும் வந்துப் பார்த்து மான் இறந்திற்று என்றெண்ணி வலைய எடுத்து செல்கையில், காகம் கரையவும், மான் சடாரென்று எழுந்தோடி தப்பிற்று. அதைக் கண்ட வேடன் பக்கத்திலிருந்த ஒரு இரும்புத் தடியை எடுத்துக் கோபத்துடன் வீச அது குறி தவறி நரியின் தலையைப் பிளந்தது.

அந்தோ" கெடுவான் கேடு நினைப்பான்" என்ற பழமொழிக்கொப்ப நரி மாய்ந்தது. இதனால் நாம் யாருக்கும் கெடுதல் நினையாமலும் எதிலும் அறிந்து, ஆராய்ந்து செயல் படுவது புத்திசாலித் தனமானது.

# ஈ.எம்.எஸ்.



பிறப்பால் பிராமணர், உள்ளத்தால் உழைக்கும் வர்க்கம். இறுதிவரை உழைப்பு.. எண்ணமெல்லாம் மக்கள் இதுதான் ஈ.எம்.எஸ் என்ற மாமனிதரின் முகவரி.

சொத்து சேர்க்க அரசியல் நடத்தும் இந்தியத் தலைவர்கள் மத்தியில், தன் சொத்துமுழுதும் கட்சிக்கு அளித்து உயர்ந்து நின்றவர். இயல்பாகவே பொதுவுடமை வாதிகளுக்கு இதயத்தில் ஈரம் அதிகம் என்றால், இவருக்கோ குற்றாலம்.

உலக நாடுகளில் கம்யூனிஸம் ஓய்ந்திருக்கலாம். இவரது உள்ளத்தில் ஓய்ந்ததில்லை. பூர்ஷ்வாக்கள் பற்றிய கருத்தில் மற்ற பொதுவுடமை வாதிகளிடமிருந்து இவர் வித்தியாசப்பட்டிருந்தார். உலகிலேயே சனநாயக முறைப்படி ஆட்சிபீடம் கண்ட முதல் கம்யூனிஸவாதி. சொல்மாறா அரசியல் சுந்தரர்கள் இந்தியாவில் இருக்கின்றார்களா?என்ன. இவரும் அதற்கு விதிவிலக்கல்ல. ஆனால் எத்தனை பேர் பஞ்சைப் பராரிகளின் ஏக்கத்திற்காக வாழ்ந்திருக்கிறார்கள்.


அவரது மறைவுக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

www.tamilarangam.net




# உணர்ந்ததினால் கேட்கின்றேன்

கிருஷ்ணா







வானொப்ப கொள்கைதந்த காந்தி மண்ணில்
வாரிசுகள் இனபேதம் காணலுற்றார்
தேனொப்ப இலக்கியங்கள் மலர்ந்த நாட்டில்
தினந்தோறும் உயிர்ப்பலிகள் செய்தி கேட்டேன்

சித்தர்களும் ஞானிகளும் வாழ்ந்த நாட்டில்
சிறுமைகளும் பொய்மைகளும் முழங்கக் காண
வித்தகர்கள் வேடிக்கைப் பார்க்கலுற்றார் நேர்ந்த
விதியென்று சேர்ந்திங்கொப் பாரி வைப்பார்

உலகத்தி லுயிர்களுளு மிடையூ றெல்லாம்
விலகவே குரல்கொடுத்த வேந்தர் நாட்டில்
கலகமதைத் தழுவியிங்கே வாழு கின்றார்
கைவண்ணம் காட்டுகின்றார் உயிர் பறிக்க

கூழில்லை; சோறில்லை; குரல் கொடுத்து
கூப்பாடு போட்டுமிங்கும் மாற்ற மில்லை
குப்பனுக்கும் சுப்பனுக்கும் மதமா வேண்டும்
கூன்நிமிர்ந்து எழுந்துநிற்க மூச்சு வேண்டும்

பிறப்பினிலே பேதமுண்டோ இல்லை, வரும்
இறப்பினிலோ பேதமுண்டோ இருந்தால் சொல்வீர்!
படைத்தவர்கள் பேதமிங்கு படைத்தாரில்லை
பாவிமகன் பேதத்தில் சாதல் நன்றோ?

உனக்கெனவே உணர்வுஉண்டு நன்று நன்று
உனக்கெனவே கனவு உண்டு நன்று, ஆனால்
உன்னுயிரும் என்னுயிரும் ஒன்றே யென்று
உணர்ந்ததினால் கேட்கின்றேன் கைகொடுப்பாய்



## திருத்தம்

சென்ற இதழில் வெளியான மத(ம் பிடித்த) வாதிகள் என்ற தலைப்பில் வெளியானக் கவிதையின் இறுதிப்பகுதியை

"எம்மதம் சம்மதம் சொல்லுவான்
தம்மதம் பெருமிதம் கொள்ளான்" என்று வாசிக்கவும்.

www.tamilarangam.net



# தேவன் கோயில்

## சீமோன் பேதுரு(St. Pierre)

கலிலேயாக் கடலின் மீனவர்களில் இவரும் ஒருவர். யோனாவின் குமாரர். இவரது சகோதரனான அந்திரேயா இவரைக் கிறிஸ்துவிடம் அழைத்துவந்து பல போதனைகளைப் பெற்றார்.கப்பர் நகூமில் கிறிஸ்து இவரது வீட்டில் தங்கி இருந்த போது பல அதிசயங்கள் செய்தார். கான்ஸ்டாண்டின் பேரரசனின் அனுமதியின் பேரில் கி.பி.352ல் திபேரியாவின் ஆளுனராக இருந்த ஜோசப் பிரபு என்ற கிறிஸ்துவ விசுவாசி பேதுருவின் வீட்டை உள்ளடக்கி ஓர் ஆலயத்தைக் கட்டினார்.

ஸசீமோன் பேதுரு முன்னுக்குப் பின் முரணான குணத்தையுடையவர்.கிறிஸ்து சீடர்களிடம்" நீங்கள் என்னை யார் என்று சொல்கிறீர்கள்?" என்று கேட்டார். உடனே பேதுரு " நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்று அறிக்கை விட்டு விட்டு, இயேசு நீரின் மீது நடப்பதைக் கண்டு தானும் அவ்வாறு நடக்க முயல, இயலாமல் நீரில் மூழ்கும் தறுவாயில் இயேசுவால் காப்பாற்றப்பட்டார். இயேசு சீடர்களின் கால்களைக் கழுவி வந்த போது பேதுரு தனதுக் காலைக் கழுவ மறுக்கிறார். ஆனால் காலைக் கழுவினால்தான் தன்னிடம் பங்கு உண்டு என்று இயேசு கூற , காலை மட்டுமல்ல கைகளையும், தலையையும் கூட கழுவ வேண்டும் என்று வேண்டுகிறார்.தான் கிறிஸ்துவை மறுத்தளித்ததை உணர்ந்தவுடன் மனம் கசந்து அழுது மனம் திருந்துகிறார். பயந்துபோய் கிறிஸ்துவை மறுத்தளித்த அவர் பின்னர் ஆயிரக்கணக்கானோர் முன்னிலையில் திடமாகக் கிறிஸ்துவைப் பற்றிப் பேச இதனால் சிறைச்சாலைக்குச் செல்ல நேரிடுகின்றது.இறுதியில் "மேமர்டைன்" சிறையில் உணவோ, நீரோ, வெளிச்சமோ இன்றி பல கொடுமைக்கு உள்ளாகி உயிர் துறக்கிறார். அவர் சிறையில் உற்ற பல கொடுமைகளுக்கிடையில் மனம் தளராமல், கிறிஸ்துவைத் துதித்து இரு சிறை அதிகாரிகளையும் மற்றும் 47 பேரையும் கிறிஸ்துவுக்குள் வழி நடத்துகிறார். ஒரு சப்பாணியரை குணமாக்கியதன் மூலம் முதல் அதிசயத்தைச் செய்த சீடரும் இவரே. ரோமாபுரியில் " மாற்கு" இவர் கூறிய செய்திகளை மனதில் கொண்டு தனது சுவிஷேஷத்தை எழுதினார். பின்னர் கி.பி.33 முதல் 40 வரை "அந்தியோராகியா" பட்டணத்தில் ஊழியம் செய்து அதி 7 ஆண்டுகள் சபையின் பேராயராகப் பணி புரிந்தார் என்று புனித " கிரகரி" கூறுகிறார்.

பேதுரு பிரிட்டனிலும், பிரான்சிலுமுள்ள கால்(GAUL)பகுதியிலும் ஊழியம் செய்தார் என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன. பிரிட்டனில் பல யூதர்களும், ரோமர்களும் குடியேறியிருந்தவேளை அது. அவர்களுக்கும், பிரிட்டனில் பூர்வீக இனத்தாருக்கும் நற்செய்தியை அறிவித்தார். பிரிட்டனில் "ஓயிட் ஹார்ன்" என்னுமிடத்தில் 4 அடி உயரமும் 15 அங்குல அகலமும் உள்ள கல்வெட்டு ஒன்று கண்டு பிடிக்கப் பட்டுள்ளது. அதில்" LOCVS SANCTI PETRI APOSTLI" அப்போஸ்தலனாகிய மரி.பேதுருவின் தலம் என்று பொறிக்கப்பட்டுள்ளது.

பேதுரு எப்படி உயிர் துறப்பார் என்பதை யோவான் 27:18ல் இயேசு முன்னறிவித்திருக்கிறார். மீட்பர் இயேசுவைப் போல நேராகச் சிலுவையில் தொங்க தனக்கு தகுதி இல்லை என்று கூறி தன்னை தலைகீழாகத் சிலுவையில் அறையும்படி வேண்டிக்கொண்டார். டைபர் நதியின் கரையில் வாடிகன் மலை மீது சிலுவையில் அறையப்பட்டார். மார் செல்லினஸ் என்ற தேவ ஊழியர் இவரது உடலைப் பதப்படுத்தி வாடிகனில் அடக்கம் செய்தார். அந்த இடத்தில் சிறு ஆலயத்தையும் கட்டினார். பேதுருவின் உடல் ரோமாபுரிக்கு இரண்டுமைல் தொலைவிலுள்ள "அப்பியு" பாதை கல்லறையில் வைகப்பட்டது. கி.பி.352 மன்னன் கான்ஸ்டந்தைனால் வாடிகனில் பெரிய ஆலயம் ஒன்று கட்டப் பட்டபோது பேதுருவின் உடல் மீண்டும் நகர்த்தப் பட்டது. இந்த ஆலயத்தின் அழிவின்மீதுதான் தற்போதுள்ள புனித St.PIERRE பேராலயம் 16ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இப்போது வாடிகன் பகுதி முழுமையும் போப்பாண்டவரின் தலமாக உள்ளது.

# மணியோசை

எல்லெஸ்

## Testez votre connaissance:

**Réponses** 1:b 2:b 3:a 4: le polo 5: a et c 6:b 7:b 8:c 9: vrai 10: a 11:b

உலகில் நான்கு வகையான ஒழுக்கம் தேவை. அறிவு, துணிவு, தன்னடக்கம், நீதி. இந்த நான்கு நற்குணங்களிலும் தலையாயது அறிவே. அறிவுள்ளவனுக்கு இந்த மூன்றும் இயல்பாக வந்து அமைந்து விடும்.

பிளாட்டோ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# இலவு காத்த கிளிகள்

நாயகன்

இந்தத் தடவை எப்படியும் பந்தயப் பணம் நிறைய வரும். ராசத்தியைப் பெண்கேட்டு அம்மாவை அனுப்பலாம். முறைப் பெண்ணாக இருந்தாலும் முறைப்படி செய்தால்தானே மதிப்பு. ராசாத்திக்கும் என்மேல் ஒரு இது வர வேண்டாமா?" என்று எண்ணிக் கொண்டே அவித்த முட்டைகளை உள்ளே தள்ளிக் கொண்டிருந்தான் ராக்கப்பன்.

நிலையான தொழில் என்று ஒன்றுமில்லை. சிறுவயதிலேயே தகப்பன் இறந்து விட்டதால், அம்மாவின் பராமரிப்பு நன்றாக இருந்ததாலும், தான் தோன்றித் தனமாக வளர்ந்துவிட்டான். சிறுவயதில் கோவில் திருவிழாக்களில் கண்டு களித்த உறியடி, மாடுபிடி, காட்டாகுஸ்தி, பலப்பரிட்சை போன்ற பந்தயங்களில் ஈர்க்கப்பட்டு தானும் அதையே தொழில்போல் எண்ணிக் கொண்டு பணம் செய்து வந்தான்.

இவனுக்குச் சரியான போட்டியாக மாரியப்பன் எல்லா பந்தயங்களிலும் கலந்து கொண்டுவந்தான். இவனும் ராசாத்திக்கு ஒருவகையில் முறை மாமன்தான். பந்தயத்தில் நிறைய சம்பாதிப்பதற்காக இருவரும் முறைப்படிப் பேசிக்கொண்டு,விட்டுக் கொடுத்துக் கொண்டு ஜெயித்து வந்தார்கள்.

இப்படித்தான் ஒருமுறை மாரியப்பன்,

"என்ன ராக்கப்பா..! ஊர்த் திருவிழா வருதில்ல.. இந்தத் தடவைக் பந்தயத்தில் கொஞ்சம் உட்டுக் கொடுத்தியானா, வீட்டக் கொஞ்சம் எடுத்துக் கட்டலாம். ஒனக்கும் கொஞ்சம் மேக்கொண்டு கொடுத்திடறேன்" என்றான்.

"அதுக்கென்ன மாரியப்பா!..இப்படி அப்படி இருந்தாத்தான் நாமும் பொழைக்கலாம். கவலப்படாதே..! ஒன் இஷ்டம் போல ஆவட்டும்". இது ராக்கப்பன்.

இதுமாதிரி பல தடவை ஒருவருக்கொருவர் சம்பாதித்துக் கொண்டார்கள்.

ஆனால் இப்போது திருமண ஆசை வரவும் 'எப்படியாவது ராசாத்திப் பார்க்க தான் பெரிய வெற்றி பெறவெண்டும். அவளே தன்னிடம் வந்து, "மாமா! மாமா! எப்போது நம்ப கல்யாணம்?" என்று கெஞ்ச வேண்டும்.அப்புறம் தான் அம்மாவைப் பெண்கேட்க அனுப்பவேண்டும் என்று ராக்கப்பன் தீர்மானித்தான்.

இதுபோன்றே மாரியப்பனும், "ராசாத்திக்கு தன்மேல் ஒரு மயக்கம் வரவேண்டும், அதற்கு பிறகே திருமணம் என்று தீர்மானித்தான். தகுந்தாற்போல் பக்கத்து ஊர் மாரியம்மன் திருவிழா மிகப் பெரிய அளவில் நடக்க ஏற்பாடாகியிருந்தது. ஆஹா..சரியான சந்தர்ப்பம். மாரியப்பனிடம் உடன்பாடு செய்துகொண்டு காட்டாகுஸ்தியில் ஜெயித்து பணம் பண்ண வேண்டும்.

அத்தையையும், ராசாத்தியையும் குஸ்தி பார்க்க இலவச பாஸ்கொடுத்து அழைக்கவேண்டும். ராசாத்தி வந்தால், குஸ்தியில் நிறைய அல்டாப்புகள் காட்டி அவளைக் கவர்ந்து விட்டால் அப்புறம் ஜாலிதான்"என்று எண்ணியவனாய் தன் நண்பனைப் பார்க்கராக்கப்பன் கிளம்பிக் கொண்டிருந்தான்.

"ராக்கப்பா...! ராக்கப்பா..! " என்றழைத்தவனாய் அவனது நண்பன் உள்ளே நுழைவதுகண்டு அவன் திகைத்து நின்றான்.

"அடடே!.. என்ன ஒத்துமை பார்த்தியா! மாரியப்பா.. இப்பத்தான் நானும் ஒண்ண பார்க்கவரனும்னு கௌம்பிக்கிட்டிருந்தேன். நீயே வந்திட்டே. ஒக்காரு", என்று ஒரு மோடாவை காட்டினான்.

"பெரிசா ஒண்ணுமில்ல ராக்கப்பா, இந்த தடவை எனக்கு நீ எனக்கு ஒத்துழைச்சியானா ஒரு நல்ல காரியத்துக்கு துணையானா மாதிரி இருக்கும். அதான் வர்ற மாரியம்மன் திருவிழாவிலே நம்ம ரெண்டு பேருக்கும் நடக்குற காட்டாகுஸ்தியிலே நீ உட்டுக் குடுத்து, நான் ஜெயிச்சிட்டா ஒனக்கு வேண்டியதுக்கு மேல கொஞ்சம் போட்டுத் தரேன். என்ன சொல்ற..?"



வந்த கோபத்தைப் பட்டென்று நிறுத்தி ஒரு கேணச் சிரிப்பை உதிர்த்த ராக்கப்பன்,
"என்ன மாரியப்பா!.. எவ்ளோ தடவை நாம ஒருத்தருக் கொருத்தர் அஜிஸ்மெண்ட் பண்ணிகிட்டிருக்கோம். ஆனா இந்த தடவை கட்டாயமா நாந்தான் ஜெயிக்கனும்னு இருக்கேன். நீ எவ்ளோ கேட்டாலும் மேக்கொண்டு போட்டுத் தறேன். அடுத்தது ரெண்டுல்ல மூணு போட்டியில கூட ஒனக்கு உட்டு கொடுக்கறேன். இந்த தடவை நீதான் என்ன பெரிய லெவல்ல ஜெயிக்க உடனும்".

" இதான்ன வேணாம்கிறது. இந்தத் தடவைஎனக்கு சவாலு உட்டு ஜெயிக்கனும்கிற கௌரவப் பிரச்சினை. நீ என்னா சொன்னாலும் என்னோட காது கேட்காது. நீ

www.tamilarangam.net



உட்டு குடுத்தியானா சரி. இல்லன்னா நானும் என்னோட வலுவ காட்ட வேண்டியிருக்கும்"

"டேய் இன்னாடா!.. போனாப்போவுதுன்னு பாத்தா என்கிட்டேயே வலுவப் பத்தி பேசறயா?,இந்தத் தடவை ரெண்டுல ஒண்ணு பார்த்துட்டுத்தான் மறுவேலை. நீ வெளியே போகலாம்!", என்ற ராக்கப்பன்,கதவுப் பக்கம் கையைக் காட்டினான்.

மாரியம்மன் திருவிழாவையொட்டிராக்கப்பன், மாரியப்பன் மோதும் படு ரோஷமான காட்டாகுஸ்தி காணத் தவறாதீர்கள் என்ற சுவரொட்டி பட்டி தொட்டி எங்கும் அலங்கரித்தன. இரு குஸ்தி கும்பல்களும் படு உஷாராகத் தங்களைத் தயார்படுத்திக் கொள்வதில் இருந்தார்கள்

ஏய்!.. ராசாத்தி..! சீக்கிரம் கெளம்புடி, அங்கே கூட்டம் முண்டி அடிச்சிகிட்டு வரதுக்குள்ள எடம் புடிச்சி ஒக்காரணும்" என்று பரபரத்துக் கொண்டிருந்தாள் ராமாயி.

"அத்தே!.. இந்தா பாஸ் குஸ்திப் பார்க்க கட்டாயம் ராசாத்தியோட வரணும்". என்று முறைமாப்பிள்ளைகளிருவரும் ஒருவர் மற்றவருக்குத் தெரியாமல் அழைத்து விட்டுச் சென்றிருந்தனர். அதன் விளைவுதான், ராமாயி மகளிடம் இந்தப் போடு போட்டுக்கொண்டிருந்தாள். ராசாத்தியும் சர்வ அலங்காரத்துடன் கிளம்பிவிட்டாள்.

மாரியப்பன் பார்வை கூட்டத்தை பதினோராவது முறையாக வலம் வந்தது. இந்தமுறை ஏமாற்றமில்லை. அத்தனைக் கூட்டத்திலும், மதுரை வீரன் பொம்மிக் கணக்காராசாத்திப் பளிச்சென்றிருந்தாள். அவளைப் பார்த்து ஜாடையாக சிரித்து வைத்தான்.

ராக்கப்பனும் அவளுக்காகவே காத்திருந்ததுபோல், கையை அசைத்து தன் சந்தோஷத்தைக்காட்டிவிட்டு முன்னும் பின்னுமாக வலம்வந்து சில அடவுகளைப் பிடித்தான்.

சண்டை ஒருவழியாக மணி அடித்து ஆரம்பிக்கப்பட்டது. முதல் ரவுண்டிலேயே இருவரும் மிக ஆக்ரோஷமாகக் மோதிக்கொண்டார்கள். பற்றாக்குறைக்கு அவரவர் ரசிகர்கள்வேறு. "அண்ணே அப்படி போடு! அண்ணே விடாதே!"என்று மாற்றி மாற்றி உற்சாகப் படுத்த நண்பர்களிருவரும் இன்னும் பயங்கரமாக சண்டை யிட்டுக்கொண்டிருந்தார்கள். ராசாத்திக்குக் கூட உற்சாகம் தாங்கவில்லை. அவர்கள் இவளைப்பார்க்கும் தோறும் கைக்கொட்டி ஆர்ப்பரிக்க அதன் விளைவு சண்டையில் இன்னும் வேகம். இவர்களின் வேகம் அவரவர் ரசிகர்களையும் தொற்றிக்கொள்ள அடுத்த சில நிமிடங்களில் அங்கு ஒரேகளேபரம்.

"வாடி மகளே! ஊட்டுக்கு ஓடிபோயிடலாம், சோடாப் பாட்டில் பறக்கும் போலகீதே!.." என்றவளாய் ராமாயி தன் மகளை இழுத்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தாள். அதற்குப் பிறகு கண்ணீர்ப்புகையும், ஊரடங்கு உத்தரவுமாய் ஒருவழியாக போலீஸ் கலவரத்தை, அடக்கவேண்டியதாயிற்று.

மறு நாள், பக்கத்து ஊர் சிறிய மருத்துவ மனை. அடுத்தடுத்த இருகட்டில்களிலும் நண்பர்களிருவரும் எங்கே உடல் என்று தெரியாதவாறு கட்டுகளுடன் கை கால்களை அசைக்க முடியாத நிலையில் கிடக்க வேண்டியதாற்று.

மெல்ல கதவைத் திறந்துகொண்டு, ராமாயி மகள் ராசாத்தியுடன் உள்ளே நுழைந்தாள். ராசாத்தியைப் பார்த்தவுடன் இருவரும் சிரமப்பட்டுப்புன்னகை புரிந்து வைத்தார்கள்.

ராமாயி," அடப் பாவி பசங்களா!.. இப்படியா அடிச்சிக்கிவிங்க. நானும் இந்தத் திருவிழா முடிந்ததுஉங்ககிட்ட சொல்லனும்னு இருந்தேன். அதுக்குள்ள இப்படி செஞ்சீட்டிங்களே!.

"...."

"ராசாத்திக்குப் பக்கத்து ஊர்ல இருந்து பெண்கேட்டு வந்தாங்க.பையன் போலீஸ்ல இருக்கான். ராசாத்திய ரொம்ப புடிச்சிபோயி பாக்குவெத்திலையும் மாத்தியாச்சு. ஆம்பிள இல்லாத வூடாச்சேன்னு ஒதவிக்கு ஒங்களத்தான் மலைபோல நம்பியிருந்தேன்.இப்படி மோசம் பண்ணிட்டீங்களே!.வர்ர பொதன்ல கல்யாணம். ஏதோ இங்கிட்டிருந்தே ஆசீவாதம் பண்ணி வையுங்க. எது எப்படி யிருந்தாலும், தாலிகட்டின கையோட புருஷன் பொண்டாட்டியா ஒங்களைத்தான் மொத மொதல்ல பார்க்கவருவாங்க.

"...."

"இந்தாங்கடா வாழப்பழம், நெலமயப் பார்த்தா அத முழுங்கறதுக்குக் கூட வாயக் காணோம்.. போங்கடா போக்கத்த பசங்களா!. பொறவு பார்க்கலாம், நான் வறேன்". கிழவி,ராசாத்தியை இழுத்துக் கொண்டு நடையைக் கட்டினாள்.

" நீட்டி முழக்கிய கிழவியின் மண்டையிலே ஒரு போடு போடலாம் என்று நினைத்தார்கள். அவர்களால்தலையில் அடித்துக் கொள்ளகூட முடியாமல் மனதுக்குள்ளேப் புலம்பத்தான் முடிந்தது.

## உங்களுக்குத் தெரியுமா?

### PHOTOS

நீங்கள் உங்கள் வீட்டுத் திருமணம் அல்லது இதர விழாக்களுக்கு ஒரு புகைப்படக்காரரை நியமிக்கின்றீர்கள். அவர் தங்கள் நிகழ்ச்சியில் எடுத்த படங்களை கழுவி பதிவு எடுத்து கொடுத்த பின்னர் மூலப் பிரதிகளை(négatifs) அவரே வைத்து கொள்ளலாமா? என்ற கேள்வித் தங்களுக்கு எழலாம் பொதுவாக நிழற்படங்கள் (photographies)உணர்வுத் திறன்கள்(art.L.112. 2.9 du code de la propriété intellectuelle). என்று கருதப் படுகின்றன. உண்மையில், நிழற்படங்கள் எடுப்பது ஒளிச்சேர்க்கை, கோணம், அமைப்பு.. என ஒரு கலைஞனின் கைவண்ணத்தில் உருவாக்கப் படுவதால், நிழற்படங்கள் மூலப் பிரதிகளில் அவருக்கு உரிமையுண்டு (Droit de propriété sur son oeuvre art. L.111.1 ). ஆனால் அவற்றை வேறு காரணங்களுக்காக மறுபதிப்பு செய்ய நேரிட்டால் கண்டிப்பாகஅவர் உங்களது ஒப்புதலை உரிய வகையில் பெற்றிருக்கவேண்டும்.

www.tamilarangam.net



தொடர் நாடகம்

# வேலைக்கு ஆள் தேவை

G. திமோன்

## காட்சி 3 தொடர்ச்சி

இடம்: வீடு

பாத்திரங்கள்: - கணக்கப்பிள்ளை - ஜமீன்தார் மகன் - வேலைக்கு வந்தவர்,

வேலைக்குவந்தவர்: ஏங்க சின்ன எசமான், உங்க வூட்ல உள்ளவங்க பேரெல்லாம் தெரிஞ்சுகிட்டேன், இனிமே எனக்கு என்னென்ன வேலைன்னு தெரிஞ்சுக்கலாங்களா?

ஜமீந்தார்மகன்: ஒனக்கு என்ன கலெக்டர் உத்தியோகாமா கொடுக்க கூப்பிட்டோம். இதோ எங்கப்பா வர்றார், கேட்டு தெரிஞ்சுக்க.

(உள்ளேபோதல்)

## காட்சி- 4

ஜமீந்தார்: (கணக்கப் பிள்ளையுடன் வந்து கொண்டே): என்ன வேலன்னுதானே? சொல்றேன். நீ ஏற்கனவே சொல்லியிருக்க, சொன்னத செய்வேன்னு. ஒனக்கு வாழ்க்கையிலே எப்படி இருக்கனும்னு ஆசை? சொல்லு.

கணக்கு: ஐய்யா.. அப்பட கேட்டிங்கனா.. உங்கள மாதிரிஜாமீந்தாரா ஆவனும்னு சொல்லிடப்போறான்.

ஜமீன்: ஜமீந்தாருன்றத வுடு. என்னை மாதிரின்னு சொல்றதல சந்தோஷம். (வேலையாளைப் பார்த்து) தோ பார்யா எனக்கு சின்ன வயசுலேர்ந்து சாதன புரிஞ்சு பேர் வாங்கனும், தியாகம் புரிய தயாரா இருக்கனும்னு ஆசை. ஆனாஅப்போ முடியல, காலமும் ஓடிப்போச்சு.. அதுக்குத்தான் ஒன்ன..

வே.வ:( நெளிந்து கொண்டே) ஆமாங்க எசமான் எனக்குக் கூட வாழ்க்கையிலே ஏதாவது சாதனபட்ச்சி, தியாகம் செஞ்சி, ஏதோ நம்ம பேர் நெலச்ச்சி நிக்கிற மாதிரி...

கணக்கு: கின்னஸ் பொஸ்த்தகத்துல எடம் புடிக்கனும்னு மறைமுகமா சொல்ற

வே.வந்தவர்: ஹிஹ்ஹீ..(வெட்கத்தோடு சிரித்தல்)

ஜமீன்:அப்படி வா வழிக்கு. ஒன்ன வெச்சி, வேல வாங்கி ஒம்பேரும் எம்பேரும் நெலச்சி,நிக்கிற மாதரி செய்யறேன். நீ எனக்கு கெடச்ச புண்ணியம்.

வே.வ.: ஐய்யய்ய.. பெரிய பெரிய வார்த்தையெல்லாம் சொல்றீங்க எசமான். நான் ஏற்கனவே சொல்லியிருக்கேன். நீங்க என்ன வேலைன்னு சொல்லுங்க உயிர கூட மதிக்க மாட்டேங்க;

கணக்கு: யார் உயிர? ஐயா உயிரயா?
வே.வ: அட என் உசிரச் சொன்னேங்க. நான் எதிர் நீச்சல் போட்டே வளர்ந்தவங்க

கணக்கு: எந்த கொளத்துலே? அடச்சீ.. நான் வேற ஏதோ நெனைப்புல..

ஜமீன்: நீ செத்த சும்மா இருய்யா. ஒனக்கு சாதாரண நீச்சலே தெரியாது..நீ வேற (வேலையாளிடம் திரும்பி) தோ பாரு.. மொதல்ல எங்கிட்ட இருந்த பழைய வேலைக்காரரு நோய் வாய்ப்பட்டு போயிட்டாரு. இங்க பல வேலைக்காருங்க் இருந்தாலும், ஒன்ன மாதிரி ஆளா கெடக்கல. சில பேர் வந்து உடனே ஓடிட்டாங்க..

கணக்கு: நீ வந்து மாட்டிக்கிட்ட.

ஜமீன்: யோசித்தபடியே துப்பாக்கி மாதிரிக் காட்டுதல் பின்னர் வேலையாளிடம்) எங்க தாத்தா காலத்துலர்ந்து வேலைக்கு இருந்தவங்கெல்லாம், எல்லாத்துக்கும் கட்டுபட்டு, ஒத்துப்பட்டு, அனுசரிச்சு வேல செஞ்சாங்க அவங்கெல்லாம் வயசானதால, காசியாத்திரை போறேன்னு போனாங்க..திரும்பி வர்றாங்களோ இல்லியோ?..

வே.வ: நீங்க ரிட்டர்ன் வாங்கி கொடுக்கலியா?.. ஏங்க எசமான்?

கணக்கு: எனா எல்லாரும் படுவயசானவங்க.

வே.வ: எங்ப்பாவுந்தாங்க. தனியா சபரிமலைக்கு போறேன்னு போயி ஆறேழு வருஷம் ஆயிடுச்சி இன்னும் திரும்பி வரலேன்னா பாருங்களேன்.

ஜமீன்: அது .. ஒங்கமா தொல்ல தங்காம ஓடிப்போயிருப்பாருய்யா.

கணக்கு: ஐயாவுக்குத்தெரியும்.. எங்கப்பாவுந்தான் இங்க கணக்கப்பிள்ளையா இருந்தவரு. அவரும் சபரிமலைக்குப் போறேன்னு போனாரு இன்னும் திரும்பி வரல.

ஜமீன்: இங்க தில்லுமுல்லு செஞ்சு பணம் கிணம் சுருட்டியிருப்பாரு, அதுக்கெலாம் வருந்தி இப்ப தவம் இருக்காரோ என்னவோ?

வே.வ: கூட்டத்தோடுதானுங்க போனாரு. திரும்பிவந்தவங்கிட்ட விசாரிக்கிறதுதான?

கணக்கு: இல்ல, அவரும் திருவிழா சமயத்துல இல்லாம தனியாகத்தான் போனாரு.எங்க போனாரோ!..

வே.வ: அடடா! அப்போ வழிதெரியாம சபரிமலைக்குப் பதிலா இமய மலைக்குப் போயிட்டாரோ என்னமோ!..

ஜமீன்: இருந்தாலும் இருக்கும்.

கணக்கு: ஐயோ ! என்னங்க ஐயா! எனக்குப் பயமா இருக்கே எங்கப்பா பாவம் எங்கம்மா ஒரு ஸ்வெட்டர் கூட கொடுத்தனுப்பல
வே.வ: பாவங்க!..

கணக்கு: ஏன் ?.. ஸ்வெட்டர் இல்லாததாலயா?..

வே.வ: இன்னும் திரும்பி வரலீங்கள, அதச் சொன்னேன்

கணக்கு: அட போய்யா.. நாங்க இப்பத்தான் கடங்காரங்க தொல்லையில்லாம இருக்கோம்.

வே.வ: அவ்வளவு கடன் வாங்கியிருந்தாரா?

கணக்கு: ஹஹஹம்..! கடன் கொடுத்தாரு, கொறச்ச வட்டிக்கி. இதனால எப்போவும் எவனாச்சும் கடன் கேட்டு வந்து தொலப்பாங்க. இப்ப அந்த தொல்ல இல்லன்னேன்.

தொடரும்...

www.tamilarangam.net



# புதியதோர் உலகம் செய்வோம்

கோவிந்தசாமி செயராமன்

உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய உலகினை செவ்வனே அமைப்பதற்குத்தான் முயல்கிறான். ஆனால் எந்த ஒரு மனிதனும் தனியாகப் புதிய உலகினை படைக்க இயலாது. அதனால் எல்லோரும் ஒன்றுகூடி முயற்சி செய்தால் புதிய உலகத்தினை படைக்கலாம். முதலில் உலகில் ஒற்றுமை வேண்டும். 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற பொதுமொழி உள்ளது.

புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்
பொதுவுடமைக் கொள்கைதிசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோ டதைஎங்கள் உயிரென்று காப்போம்

இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்
'இது எனதெ' ன்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்

என்று பாவேந்தர் பாரதிதாசன் பாடியுள்ளார்.

தீயகொடுமையான உலகத்தை வேரோடு களைய வேண்டுமென்ற என்ற பாவேந்தனின் வேட்கை இங்கே கவனிக்கத் தக்கது. ஒரு நிலத்தை நன்றாக பயிரிட வேண்டுமென்றால் அந்நிலத்தை நன்றாக உழுது உரமிட்டு அதில் வளரும் களைகளை வேரோடு களைந்தால்தான் பயிர் நன்றாக வளரும். அதுபோலத்தான் உலகமாகிய நிலத்தில் நம்பிக்கையுடன் உண்மையை உரமாக இட்டு தீயவர்களைக் களைந்தால் உலகம் செழித்தோங்கும்.

'எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்'

'இனியொரு விதி செய்வோம் - அத
எந்த நாளும் காப்போம்'

'திறமை கொண்ட தீமை யற்ற
தொழில்பு ரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானம் எய்தி
வாழ்வம் இந்த நாட்டிலே'

என்று மகாகவி பாடியுள்ளார்.

நம் முதுரை ஒன்றில் சாம, பேத, தான, தண்டம் என்று உள்ளது. இதிலும் நம் முன்னோர்கள் சமாதானத்தைத்தான் முதலில் வைத்துள்ளார்கள். உலகப் புகழ் பெற்ற நம் தத்துவஞானிகளும் உலகம் உய்ய சமாதானத்தையே நாடியுள்ளார்கள். பரம்பு நாட்டைஆண்ட பாரிமீது மூவேந்தர்களும் படையெடுத்தபோது சமாதானத்தை நாடி ஔவை சென்றாள். நம்மன்னர்களிடையே சமாதானத்தூது என்பது வழக்கில் இருந்தது.

லியோ டால்ஸ்டாய் என்ற ஞானி 1869ஆம் வெளியிட்ட போரும் அமைதியும் என்ற நூலில் அமைதியின் மூலமாகவே உலக நாடுகள் வளர்ச்சியினைப் பெறமுடியும் என்று தெளிவாக்கியுள்ளார். அமைதி காத்தலை ஒவ்வொரு நாடும் பின்பற்ற வேண்டியதின் அவசியத்தை அதில் அவர் வலியுறுத்தியுள்ளார். அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஏன் ஒற்றுமையாக வாழவேண்டும் என்பதற்கான காரணங்களைத் தெளிவாகக் கூறியவர் தாமஸ் பெய்ன் என்ற ஞானி. நாடு என்பது எது? பசியும் பிணியும் பகையும் இல்லாது இருக்க வேண்டும். அவை மலிந்த நாடுகளைக் காடு என்றுதான் சொல்லவேண்டும் என்று சொன்னவர் எமர்சன்.

காந்தியடிகளும் போர்க்கொடி தூக்காமல் சமாதானத்தையே நாடி அமைதியின் அடிப் படையில் சுதந்திரம் வாங்கினார். சக்கரவர்த்தி அசோகன், போரின் விளைவுகளைப் பார்த்தபின் மன அமைதிக்காக பௌத்தத்தை நாடினான். போர் வேண்டாப் புரவலனானான்.

வள்ளுவரும்,


"அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு"

"இகலென்ப எல்லாஉயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய்"

எல்லோரிடத்திலும் அன்பு செலுத்தி வாழ்ந்த வாழ்க்கையே உலகத்தில் இன்பமுற்று வாழ சிறந்த வாழ்வாகும்.

நாம் பழைய இலக்கியங்களையும், கவிதைகளையும் இதிகாசங்களையும் எடுத்துப் பார்த்தோமென்றால் அவர்கள் படைக்க விரும்பிய உலகினை நன்கு அறியலாம். அவ்வழியே புதிய உலகம் படைப்பதற்கான சிறந்த வழியாகும்.

' வான் செடியும், கொடியும் - மண்ணும், நீரும் எதுவும் மாறவில்லை, மனிதன் மாறிவிட்டான் என்று கவியரசு சொன்னதன் உண்மயை உணர்ந்து, சான்றோர்கள் கருத்துக்கொப்ப புதிய உலகினை விரைவில் காண்போம்.



<u>மதாம் 1</u>: என்ன அவியத்துல(**avion**) ஏறனவுடன பிலோத்தப்(**pilote**) பார்த்து ஒங்க மிஸியே salut அடிச்சுட்டு வறாரு.

<u>மதாம் 2</u>: எங்க மிஸியே **armée** ல இருக்கறதால முன் ஜாக்கிரதையா இருக்காரு. இப்படி செஞ்சா ஏதாவது கிராது கிடைக்குமில்ல

*" Vous devez vous souvenir que pour un homme comme vous, la vie est par elle-même un service pour votre pays, car votre vie n'est pas seulement utile, elle éclaire les autres".*

*- Rabindranath Tagore*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# Provinces des Indes:V

## Karnataka

| | |
|---|---|
| *Capitale :* | *Banagalore* |
| *Population( '000 in 1991):* | *44,497* |
| *Superficie('000 Sq.km):* | *192* |
| *PNB (en million) :* | *291,22 0* |
| *Revenu par habitant(Rs)* | *6,313* |
| *Langue Principale* | *Kannada* |
| *Alphabétisation* | *56%* |

*Hoysaleswara Temple, Halebid*



L'état de Karnataka, anciennement connu sous le nom de Mysore, est une province contrastée, avec d'une part , l'industrie de haute technologie de **Bangalore**, et d'autre part, une importante surface rurale. Karnantaka possède également une des architectures les plus fascinantes de l'Inde . L'état se situe au sud de **Goa** et **Maharashtra** à l'ouest **d'Andra Pradesh,** au nord - ouest du **Tamil-Nadu** et au nord du **Kerala**. La région est, de plus bordée par une côte maritime d'environ 260 Km. les majeurs parties se trouvent dans le plateau de Decaan , principalement dans des zones pluvieuses.


Karnataka est une histoire ancienne de plus de 2000 ans. L'état fut dirigé par de grandes dynasties telles que les **Mauryas, Nandas, Chalukyas, Pallavas et Hoysales**. Il y a 500 ans, à **Badami**, située au nord du Karnataka, les Chalukyas ont bâtit un de plus anciens temples hindou de l'Inde. Tous les temples qui suivirent, inspirèrent leur architecture à celui des Chalukyas et des temples de Pallava à **Kanchipuram**. Les Hoysalas ont également laissé des preuves vivantes de leur ère par les magnifiques temples de **Somnathpur, Belur et Halebid**.

Le royaume hindou de Vijayanagar a été fondé en 1336, avec pour capitale **Hampi.** Il est sûrement l'un des plus beau, plus grand et fascinant parmi les ruines des royaumes indiens. Vijaynagar a atteint son sommet au début de l'an 1550, mais il tomba dans " deccan Sultanats", quand Bijapur gagna de l'importance en tant que capitale de son royaume. Aujourd'hui, Bijapur est une petite ville entourée par un mur imposant, contenant une collection impressionnante de mosquées et autres souvenirs de son glorieux passé.

Ayant d'être pris par les colonies anglaises, Karnataka connu d'autres dirigeants comme **Wodeyars, Hyder Ali** et **Tipu Sultan.**

Les attractions touristiques de la région inclus des parcs variés, l'ancienne capitale première Mysore avec ses fameux jardins de **Brindavan** et son palace, la statue de **Gomateshwara,** haute de 57 pieds, à **Sharavanabelagola, Badami, Aihole et Pattadkal** avec leurs temples en pierre de 1300 ans; la ville d 'Hampi, célèbre pour son musée ouvert; **Gulbarga, Bidar et Bijapur**, renommés pour leurs monuments " Inde - Saracenic" ; **Mangalore et Karwar** pour ses plages et ses ports; **Gokarna, Udupi, Dharamsthala, Melkote** et **Saundatti** pour les centres de pèlerinage. et **Bandipur** aussi bien que **Nagarhole** pour ses milieux forestiers.

*Gol Gumbaz, Bijapur*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மகளிர்

## இந்தியத் திருமணச் சட்டங்கள்

சுதா ராமலிங்கம்

பெரும்பான காதல் திருமணங்கள், அரசின் பதிவுக் கூடங்களில்தான் நடை பெறுகின்றன. பொதுவாக சம்பந்தப்பட்ட ஜோடிகள், சட்டப்படி, தங்கள் திருமணம் பதிவு செய்யப்பட்டவுடன்பெற்றோர்களும், உறவினர்களும், தங்களை அங்கீகரித்தே ஆக வேண்டும் என்பதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை என்று நினைக்கின்றார்கள். சில சமயங்களில் , பெரும்பாலும் பெண்கள் தங்களுக்குச் சட்டபடியான உரிமை இதன் மூலம் கிடைக்கின்றது என்று நம்புகின்றார்கள். எது எப்படி இருப்பினும், பதிவு திருமணம் என்ற வார்த்தை மட்டுமே நம்முடைய திருமணத்திற்குச் சரியான அங்கீகாரமாகாது.. இங்கே மதச் சட்டங்களும் இந்தியர்களை வழி நடத்துகின்றன என்பதை உணர்ந்தாக வேண்டும்.

இந்தியாவை பொறுத்தவரையில் இந்துத் திருமணச் சட்டங்கள், கிறிஸ்துவ மதச் சட்டங்கள், பார்சிக்களுக்கானத் திருமணச் சட்டங்கள், முஸ்லீம்களுக்கான ஷரியா சட்டங்கள் என ஒவ்வொரு மதத்தாருக்கும் திருமணச்சட்டங்கள் உள்ளன. இதில் கவனத்தில் கொள்ளவேண்டியது,. இச்சட்டங்கள் அனைத்துமே மதங்களை அடிபடையாகக் கொண்டவையே தவிர, ஜாதிகளையோ, உட்பிரிவுகளையோ சார்ந்தவை அல்ல. ஒருவர் எந்த ஜாதிகாரராக இருந்தாலும் ஒரு இந்துவுக்கு இந்துத் திருமணச் சட்டமே செல்லுபடியாகும். கிறிஸ்தவரும் அவர் எந்தப் பிரிவில் இருப்பினும்( கத்தோலிக், பிராட்டஸ்டண்ட்..) அவருக்கு கிறிஸ்துவ திருமணச் சட்டமே செல்லும். அவ்வாறே ஒரு முஸ்லீம் எந்தப் பிரிவினர் ஆயினும் (ஷியா, சுன்னி,அஹமதியாஸ் மற்றும் எந்தப் பிரிவினர் ஆயினும்) அவர் ஷரியா திருமணச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்.

இந்துத் திருமணச் சட்டப்படி, ஒரு இந்து மற்றொரு இந்துவை மட்டுமே திருமணம் செய்து கொள்ளமுடியும். இரு இந்துக்கள் தங்கள் திருமணத்தைச் சட்ட அங்கீகாரம் வேண்டின் முதலில் இந்து வழக்கப்படி திருமணம் செய்துகொண்டு அதன் பின்னரே பதிவுத் திருமணம் செய்துக் கொள்ள வேண்டும். தமிழகத்தில் சுயமரியாதை என்ற பெயரில் சாட்சிகள் முன்னிலையில் மாலைகள் மாற்றிக் கொண்டு திருமணம் செய்துகொள்கின்றனர். எது எப்படி இருப்பினும், பதிவுத் திருமணம் என்பது ஏற்கனவே அங்கீகாரம் செய்யப்பட்ட மண உறவின் மறுப் பதிப்பே.

கிறிஸ்துவ திருமணச் சட்டத்தில், யாரேனும் ஒருவர் மணமகனோ அல்லது மணமகளோ கிறிஸ்துவராக இருந்தால் போதும், மற்றவர் எந்த

# மட்டும்

# et Pour les hommes aussi

மதத்தை வேண்டுமானாலும் சார்ந்திருக்கலாம். கிறிஸ்துவ மதத் திருமணங்கள் சர்ச்சில் பதிவுசெய்யப் படுகின்றன, அங்கீகாரம் பெற்ற மதக் குருக்களும் அதனைப் பதிவு செய்கின்றனர். முஸ்லீம்கள் திருமணத்தில் ஒப்பந்தங்கள் என்ற ரீதியில் சம்பந்தபட்ட தம்பதியினர் இறுதியில் நிக்கா நமாவில் கையொப்பமிட்டு தங்கள் திருமணத்தை முடித்து வைக்கின்றார்கள்.


இரு வேறு மதத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள் மணம் முடித்துக் கொள்ள விரும்பினாலோ அல்லது ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும், மத வழக்குப்படி மணம் செய்துகொள்ள விரும்பாத நிலையில் சிறப்புத் திருமணச் சட்டம் அவர்களுக்குத் வழிசெய்கின்றது.

சிறப்புத் திருமணச் சட்டத்தின்படி, மனமுடித்துக்கொள்ள விரும்பும் ஜோடி, பதிவுத் திருமணம் செய்துகொள்ள இருக்கின்ற தங்கள் விருப்பத்தை குறைந்தது 30 நாட்களுக்கு முன்னோ அல்லது பதிவுத் திருமணம் செய்துகொண்ட 30 நாட்களுக்குள்ளோ அறிவித்தல் வேண்டும். பின்னர் தகுந்த சாட்சியங்களைக் கொண்டு, குறைந்தது ஒரு துணைப்பதிவாளரின் முன்னிலையில் பதிவுத் திருமணம் நடைபெறுதல் வேண்டும்.




www.tamilarangam.net








## Salade de Riz




**INGRÉDIENTS:**

*200 g de Riz Basmati
* 2 grosses pommes coupées zn morceaux
* 200 g de mortadelle coupée en morceaux
*1/2 chou - fleur cuit
* 100g de petits pois cuits
* 1 cuillère à soupe d'huile
* 1 cuillère à soupe de vinaigre/citron
* 400ml d'eau
* sel, poivre

Laver et égoutter le riz. faire bouiller l'eau et y verser le riz. Une fois cuit, l'égoutter et le laisser refroidir. Puis y ajouter les tranches de pommes, la mortadelle, le chou-fleur et les petits pois. Arroser d'huile et de vinaigre. Servir froid ou modéré.

**suggestion**: Vous pouvez servir le riz sur des feuilles de salade ou de chou.

## Kashmiri Pulao



**INGREDIENTS:**

* 500g de riz Basmati
*115 g d'oignons
* 5g de cannelle
* 5g de cardamome
* 5g de clous de girofle
* 1 Pincée de curcuma
*10ml de lait
* 20 g de cajou
* 20g de noix
* 50g d'huile
*1l d'eau
* sel


Laver le riz. Emincer les Oignons. Faire chauffer l'huile et frire les oignons jusqu'à ce qu'ils deviennent dorées. Frire également les épices, ajouter le riz et mélanger. Verser la moitié du safran dissolu dans un peu de lait chaud. Ajouter de l'eau chaude et remuer doucement. Laisser cuire quelques instants. Finir avec le reste du safran et chauffer jusqu'à ce que les grains soient séparés. Servir garni d'oignons frits, de noix de cajou et de noix. Il est traditionnellement accompagné du mutons Rogan josh.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கொஞ்சம் கேளுங்க



* கழுத்துக்கு அடியில் சதை போட்டவர்கள், கழுத்தை முடிந்தவரை மேற்புறம் தூக்குங்கள். அடுத்து முடிந்த வரை கீழ்ப்பக்கம் குனியுங்கள். முகவாய் மார்பு வரை வர வேண்டும். தினமும் 10 முறை இப்படி செய்தால் கழுத்தில் தொங்கும் சதை காணாமல் போகும்.

* கழுத்தின் நிறம் கறுத்திருந்தால்

ஒரு ஸ்பூன் கொள்ளு, ஒரு ஸ்பூன் தயிர் ஆகிய இரண்டையும் பசைபோல் அரைத்துக் கொள்ளுங்கள். அதக் கழுத்தில் பற்றூ போல் தடவுங்கள் கால் மணி நேரம் கழித்து கழுவி விடவும். கருமை குறைந்துவிடும்.

## அணிவது எப்படி

* குட்டையான கழுத்து உள்ள பெண்கள் நீண்ட கழுத்து ரவிக்கையை போடக் கூடாது. அவர்கள் குட்டை கழுத்து ரவிக்கையை அணிவது நல்லது. அதுபோல் பெரிய காது வளையங்களையோ, கல் பதித்த நெக்லஸையோ அவர்கள் அணிந்தால் விகாராமாக இருக்கும். பெரிய கழுத்து உள்ளவர்கள் இதற்கு நேர்மாறாகச் செய்யலாம்.

* குட்டைக் கழுத்துடையவர்கள் நீண்ட கொண்டை போட்டால் அழகாக இருக்கும். முன்புறம் தொங்கவிடுவது நீண்ட கழுத்து உடையவர்களுக்கு அழகாக இருக்கும்.

* சில பெண்களுக்குக் கழுத்து அழகாக இருந்தாலும் அதைத் தடுக்க முகவாய் வந்துவிடும்.
குளிப்பதற்கு முன்பு மசாஜ் செய்துவிடவும். கீழ் நோக்கித் தேய்க்கவே கூடாது.

பணக்காரன் ஆவதற்கு பணத்தைக் குவிக்க வேண்டியதில்லை. தேவைகளை குறைத்தால் போதும்போதும்

# சுஷ்மா ஸ்வராஜ்



பாரதிய ஜனதா அமைத்திருக்கும் புதிய அமைச்சரவையில் அமைச்சர். பொறுப்பு: தகவல் ஒலிபரப்பு. முன்பு பதவியிலிருந்தபோது, சில அடிபடை விதிமுறைளை வகுத்தார்.
குறிப்பாக குடும்ப நிகழ்ச்சிகள் ஊக்குவிக்கப் படவேண்டும் என்பது இவரது ஆசை.
இவை தான் மாதிக்கும் நடுத்தர குடும்பப் பண்புகளைக் கைவிட விரும்புவதில்லை.
என்ன செய்யவேண்டும் என்பதில் தெளிவாக இருக்கிறார். முன்னுரிமை: ஒலிபரப்பு மசோதா நிறைவேற்றம். சுயாட்சி உள்ள பிரசார் பாரதி பரிசீலனைக்குள்ளாக்கப் படக் கூடும்



<u>ஒருவர்</u>: என்ன மிசியே, கல்யானம் நகைன்னு எல்லாமே நல்லாதான் செஞ்சிருக்கார், கூட ஏதோ வேலி போட கம்பியும் கொடுத்திருக்காரே மருமகப்பிள்ளை பிரான்சுலே ஏதாவது jardin வச்சியிருக்காறா?

<u>மதாம்:</u> கல்யாணம்றது ஆயிரம் காலத்து பயிருன்னு யாரோ எங்க மிசியேகிட்ட சொன்னாங்களாம். பிரான்சுல யாராவது மேய்ஞ்சிட்டா? என்ன பண்றதுன்னு....

மற்றவர்: ?.. ?..

# நான் ஒரு

அன்புள்ளம் கொண்ட தமிழ் மக்களே, " நிலா " வின் குளிர்ந்த ஒளியிலே எனது தமிழ்ப் பயிரை வளர்க்க நினைக்கும் எனது எண்ணங்களை உங்கள் முன் வைக்கிறேன்.

"வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகம்..

எனத் தமிழகத்தின் எல்லைகளைத் தொல்காப்பியப் பாயிரம் கூறுகின்றது. அதாவது வடக்கே வடவேங்கடம் எனப்படும் திருப்பதி மலையும், தெற்கே கன்னியாகுமரியும் சங்க கால தமிழகத்தின் எல்லைகளாகத் திகழ்ந்தன. அப்பகுதியில் உலகம் போற்ற வாழ்ந்தவன் சங்கத்தமிழன். சிறந்த மொழி,சிறந்த நாகரீகம், சிறந்த பண்பாடு, சிறந்த வாணிகம், சிறந்த செல்வம் அனைத்தையும் கொண்டு உலகம் போற்ற வாழ்ந்தவன் சங்கத் தமிழன். அவன் வாழ்க்கை என் மனதைத் தொட்டதனால், "நானும் சங்கத் தமிழன்" என்ர தலைப்பிலே எழுதத் தொடங்கியுள்ளேன். நீங்களும் சிந்தித்து அவன் வழி வாழ்ந்தால் வாழ்வாங்கு வாழலாம் என்பது எண்ணம்.

"இலக்கியம் ஒரு காலக் கண்ணாடி" என்ற அறிஞர்கள் சொல் உண்மைதான். சங்கத் தமிழன் எப்படி வாழ்ந்தான்; மற்றவர்களோடு எவ்வாறு பழகினான்; புலவர்களை எவ்வாறு போற்றினான் என்பன போன்ற குறிப்புகளை அவன் விட்டுச் சென்ற இலக்கியங்கள் இன்று நமக்குப் பறைசாற்றுகின்றன.

தமிழில் இன்றுள்ள பழமையான நூல்" தொல்காப்பியம்" இது ஒரு இலக்கண நூல். இதன் காலத்தை உறுதியாக கூற இயலவில்லை என்றாலும் சுமார் 4500 ஆண்டுகளுக்கு முற்பட்டது என அறிஞர்கள் கூறுவர்.இதனையடுத்து பாட்டும், தொகையும் தோன்றின. பாட்டு என்பது பத்துப்பாட்டையும், தொகை என்பது எட்டுத்தொகை யையும் குறிக்கும். அவற்றிலே உள்ள கருத்துக்களை எளிய முறையில் தமிழ் உள்ளங்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஒவ்வொரு நிலாவிலும் படைக்கலாம் என்பதே என் எண்ணம்

சங்கத் தமிழன் மாமிசம் உண்டான், மது அருந்தினான், மங்கையுடன் காதல் வார்க்கை வாழ்ந்தான். ஆனால் பண்பாட்டிலே சிறந்து வாழ்ந்தான். தன் கடமையை மறந்தானில்லை. காதலையும் வீரத்தையும் இரு கண்களாக மதித்தான். காதலித்து திருமணம் செய்துகொண்டான். இரு மனங்களுக்கிடையே இனம், மதம் சாதி என எவையும் குறுக்கீடாக இருந்ததில்லை. இதற்கு ஒரு சான்று கீழ் வரும் பாடலில் காணலாம்.

"யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தயும் நுந்தையும் எம்முறைக் கேளீர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந்தனவே"

உன்னுடைய பாட்டனாரும்,எனது பாட்டனாரும் யாரோ தெரியவில்லை. உனது தந்தையும் எனது தந்தையும் எந்த வகையிலும் சொந்தமில்லை. நானும் நீயும் எப்படி உறவானோம்? ஆனால் இன்று சிவந்த மண்ணில் பெய்த மழை நீர் போல நாம் இருவரும் அன்பினால் ஒன்றாகக் கலந்துவிட்டோம் என்று கூறுவதன் மூலம் முன் பின் தெரியாத ஆணும் பெண்ணும் அன்பினால் ஒன்று சேர்ந்து இன்ப வாழ்க்கை வாழ்ந்தார்கள் என்பதை உணர்கிறோம்.

# சங்கத் தமிழன்

*செய. பாலகிருட்டிணன்.*



மேலும்

" களவும் கற்று மற "

என்ற பழமொழியால் காதலுக்குப்பின் திருமணம் செய்துகொண்டார்கள் என்பதை உணர்கிறோம். களவு என்பது காதல் வாழ்க்கை யையும், கற்பு என்பது திருமண வாழ்க்கையையும் குறிக்கும்.

இப்படிப்பட்ட களவு வழிக் கற்பு வாழ்க்கைப் பிற் காலத்தில் ஏன் மாறியது என்பதை

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்பு"

என்ற தொல்காப்பிய நூற்பாவால் உணரலாம். "ஐ" என்ற ஓரெழுத்துச் சொல் தலைவன் அல்லது பெரியோர் என்ற பொருளை உணர்த்துகின்றது.

காலப்போக்கில்நாகரிகம் என்ற போர்வையில் பொய்யையும், களவையும் கற்றுக் கொண்டனர். பெண்கள் ஏமாற்றப்பட்டதனால் சமுதாயத்தில் பெண்களுக்கு அதிக பாதிப்பும், பாதுகாப்பின்மையும் ஏற்படத் தொடங்கியது. எனவேதான் பெரியோர்களும், பெற்றோர்களும் ஒன்று சேர்ந்து திருமணம் செய்து வைக்கத் தொடங்கினர். காதலில் வெற்றி பெற இயலாத இளம் உள்ளங்கள் திருமணம் செய்துகொள்ள இயலவில்லையே என்ற ஏக்கத்தில் மரணத்தை நாடி சென்றனர். இதனை

"கரணம் தப்பினால் மரணம்"

என்ற பழமொழி விளக்கும். கரணம் என்னும் சொல் திருமணத்தை குறிக்கும் பொருளாழம் கொண்ட சொல்.

இதுகாறும் கூறியவற்றால் சங்கத் தமிழன் காதல் வழி கற்பு வாழ்க்கை வாழ்ந்தான் என்பதும், இன்று நாம் வாழும் காதல் வாழ்க்கைக்கு அடிப்படை அமைத்துக் கொடுத்தவன் தமிழனே என்பதும் விளங்கும்..

www.tamilarangam.net



# Salut les jeunes!!

## Des métiers en pleine forme



### Paramédical

Avec 4% seulement de taux de chômage, les professions paramédicales se portent plutôt bien. Soin , rééducation, appareillage et assistance technique , quatre familles de métiers qui demande une solide occasion.

La santé demeure une préoccupation prioritaire de la population . Ce secteur se porte bien et souffre peu de chômage grâce à une mise en place progressive à l'entrée des filières, afin d'éviter l'engorgement. D'un côté les médicaux: médecins, pharmaciens, sages femmes, chirurgiens dentistes et de l'autres les paramédicaux.. masseurs-kinésithérapeutes, psychométriciens, opticiens, infirmières... veillent au quotidien sur votre santé.

Ces professions se regroupent en quatre familles bien distinctes:

les professions de soin: infirmières, puéricultrice, pédicure-podologue.

les professions de la rééducation: ergothérapeute, masseur-kinésithérapeute, orthophoniste, orthoptiste, psychométricien.

Les professions d'appareillage: audioprothésiste, opticien-lunetier, orthoprothésiste, podo-orthésiste.

Les professions de l'assistance technique: diététicien, manipulateur d'électroradiologie médicale, technicien de laboratoire d'analyse médicale.

Avec un taux de chômage de seulement 4% ce secteur offre de nombreux débouchés aux jeunes diplômés. On demande essentiellement des infirmières, des puéricultrice en crèche et des aides soignantes. Cependant, afin d'éviter l'engorgement, beaucoup de filières ont mis en place depuis de quelques années un numerus clausus. L'autre spécificité du secteur réside dans la jeunesse des métiers.

### Les salaires des débutants

Audioprothésiste : 7 000 F
Diététicien : 6000 à 8 000 F (public), jusqu'à 10 000 F (privé)
Ergothérapeute : 8 000 F
Infirmière : 9 000 F (net)
Manipulateur en électro-radiologie : 8000 F
Masseur-kinésithérapeute : 7 500 F net, (public)
Orthoptiste : 6 000 F net (public)
Orthoprotésiste : 7 500 à 9 500 F net
Pédicure-Podologue : Smic
Podo-orthésiste : 6 000 F net
Psychomotricien : 8 800 F net (public)
Puéricultrice : 9 300 F net
Technicien d'analyses biologiques : Smic

www.tamilarangam.net



# Testez votre connaissance

***1. parmi les trois noms ci-dessus se trouve celui d'un célèbre lutteur qui en 1900 se rendit à Paris et remporta la victoire sur le favori turc. A toi le reconnaître!***

a) Gautam b) Ghulam c) Akbar

***2. Parmi les disciplines occidentales suivantes, l'une d'elles est issue du kalarippayat. Laquelle?***

a) la boxe b) le karaté c) le saut à la perche

***3) Dans quelle discipline Viswanathan s'est distingué au niveau international dès l'âge de 18 ans?***

a) les échecs b) la natation c) le hockey

***4 Connais-tu le nom du sport dont tu vois ci-contre une illustration, qui se pratique à cheval et qui consiste à pousser une balle vers le but avec un maillet?***

***5 parmi les jeux internationaux cités ci-dessous, deux ont inventés ou mis au point en Inde. Quels sont-ils à ton avis?***

a) le snooker b) le football c) le badminton d) le volleyball e) le squash f) le cricket

***6. Où se déroule ce festival qui accueille pendant trois jours (autour du 14 janvier) des milliers de cerfs-volants de toutes tailles et de toutes couleurs et attire des milliers de spectateurs?***

a) jaipur ( Rajasthan) b) Ahmedabad (Gujerat)

c) Konarak( orissa) d) chennai (Tamil Nadu)

***7. le jeu indien " Chaturanga" signifiant littéralement 4 parties comprenait des éléphants, des chevaux, des chars et des fantassins. Ils s'agissait d'un de stratégie militaire. De l'inde, il s'est répandu en perse et en Arabie où le désigna sous le nom de "Shatranj". Il parvint en Europe au 10ème siècle et devint un jeu fort prisé. lequel?***

a) les dominos b) les échecs c) le jeu de dames

***8) Comment s'appelle le jeu, pratiqué par les hommes et les femmes, qui consiste les deux équipes étant chacune dans un territoire délimité par un trait - à franchir ce trait, un joueur de chaque équipe à tour de rôle, à toucher un adversaire et à revenir dans son champ sans être touché. Mais cela serait bien facile s'il ne fallait en plus exécuter ce parcours en retenant son souffle et en répétant le même mot comme une litanie. Si le joueur revient dans son camp sans avoir touché un joueur de l'équipe adverse mais en étant parvenu à maintenir son souffle en chantant, aucune l'équipe ne perd de joueur. Ce jeu se joue en deux parties de vingt minutes chacune.***

a) le kho kho b) le mallakhamb c) le kabaddi

***9) C'est en Inde que se trouve le terrain de cricket le plus haut en altitude?***

a) Vrai b) Faux



***10) Krishna aurait joué à un jeu similaire avec ses amis à Brindavan. Au 9ème siècle, les souverains du Sud Chalukyas et Rashtrakudas ont apporté leur soutien à ce sport très populaire au Maharashtra. Les hommes et les femmes le pratiquent. Quel est son nom?***

a) le kho kho b) le hockey c) le carrom

***11) Rama, le héros du Ramayana, remporta lors d'une grande compétition, la main de sa bien-aimée Sita. Arjuna, le guerrier Pandava de l'épopée du Mahabharata, a démontré ses talents dans cette discipline en prenant pour cible dans un chaudron d'huile bouillante l'oeil d'un poisson. De quel sport s'agit-il?***

a) le tir à la fronde b) le tir à l'arc c) le tir au pistolet

Réponses: page 10

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடர் கதை

# பொங்கி வரும் பெரு நிலவு!

கிருஷ்ணா

நெஞ்சிலே நினைவெதற்கு
வஞ்சகரை மறப்பதற்கு

கண்ணதாசன்

அன்று ஞாயிற்றுக் கிழமை காலை மணி எட்டிருக்கும். இன்னும் அரவிந்தன் படுக்கையில் இருந்தார். பொதுவாக அதிகாலையில் எழுந்து விடும் பழக்கம் அவருக்கு உண்டு. முந்தைய இரவு எத்தனை மணிக்கு அவர் படுக்கைக்குச் சென்றிருந்தாலும் சரி மறு நாள் அதிக பட்ஷம் அவருக்கு காலை 5 மணிக்குமேல் தூக்கம் வராது. விழித்துக் கொண்டாலும் கண்களைத் திறப்பதற்கு மனமில்லை.

இந்தியாவில் பிறந்து வளர்ந்து, இன்றைக்கு தன் வாழ் நாளின் இன்னொரு பகுதியை ஐரோப்பாவில் கழித்துக் கொண்டிருந்தாலும், காலையில் விழித்துக் கொள்ளும் பழக்கத்தை மாற்றிக் கொள்ளவில்லை. எப்போது இந்தப் பழக்கம் அவரோடு ஒட்டிக்கொண்டது என்பது அவருக்குத் தெரியாது. கிட்டத் தட்ட அவர் பிரான்சுக்கு வந்து 25 ஆண்டுகள் ஓடிவிட்டன. இந்த வாழ்வுக்கு அவர் கொடுத்த விலையும் சாதாரணமல்ல. இறுதியாக ஒரு பிரசவ சுகம். நீண்ட பாலைவனத்தில் நடந்து முடித்து, இறுதியாக நிழலில் நிற்கின்ற சுகம்.

"வாழ்க்கையும் ஒரு தவம்தான். உள்ளத்தில் திடத்துடன், உலுத்துப்போன விமர்சனங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு, உண்மையாக உழைத்தால் இங்கேயும் கேட்ட வரம் கிடைக்கும்", என்பது அரவிந்தனின் நம்பிக்கை. அது அவரைப் பொறுத்தவரை பொய்த்ததில்லை.

வார இறுதியில்கூட, குடும்பத்தோடு இருப்பதையே விரும்பினார். எப்போதாவது சில நண்பர்கள் வீட்டிற்குச் செல்வது உண்டு.

"காக்காய் கூட்டத்திலிருந்து கரைந்து கொண்டிருப்பதைவிட, குயிலாய்த் தனித்துக் குரல் எழுப்பலாம். குயிலின் குரலுணர்ந்தவர்கள் [illegible] இருக்கத்தான் செய்கின்றார்கள், வேண்டுமானால் அவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருக்கலாம். ஆனால், அந்தக் குயிலுக்கும் அதில்தானே பெருமை."


இப்படிப்பட்ட மன நிலை உள்ளவரோடுதான் மூர்த்தி என்ற பந்தம் சில நாட்களாக ஒட்டிக்கொண்டது. ஒருகடிதத்திற்கும் அதனை வினியோகம் செய்கின்ற தபால்காரருக்கும் என்ன உறவு இருக்கமுடியும்? அப்படித்தான் நினைத்திருந்தார் மூர்த்தியையும். ஆனால் இன்றைய நிலமை வேறு.

கந்தசாமி வீட்டில் அவர் கண்ட காட்சி இன்றைக்கும் அவர் முன் நிழலாடியது. போகாமலே இருந்திருக்கலாம். மூர்த்தியை அவனது அம்மா கேட்டுக்கொண்டபடி கந்தசாமி வீட்டில் விட்டதோடு அவரது கதை முடிந்தது என்றிருந்தால், இப்படி சில நாட்களாக அரவிந்தன் புலம்ப வேண்டிய அவசியமில்லை.

கந்தசாமி வீட்டில் விட்டுவிட்டு வந்த மூர்த்தியை ஒருமுறை நலம் விசாரித்துவிட்டு வரலாமே, என்றுதான் அன்றைக்கு அங்கே சென்றார்.

"ப்ர்...ப்ர்.."

இருமுறை அழைப்புமணியை அழுத்தியும் யாரும் கதவைத் திறக்காததால் கதவில் கைவைக்க கதவு திறந்துகொண்டது. இரண்டாம் தர தமிழ்ப்பாடலொன்று ஒலி நாடாவில் அலறிக் கொண்டிருக்க சற்று தள்ளி மூர்த்தி. பக்கத்தில் பிளாஸ்டிக் வாளியொன்று.



தரைத் துடைக்கப் பயன்படும், நுனியில் நூல் திரட்டுகளைக் கொண்ட குச்சியை வாளியில் விடுவதும், சற்று தூக்கிப் பிடித்து, வாளியில் நீர் வடிந்தவுடன் காத்திருந்து தரையில் லாவகமாக நூல் திரட்டுகளை பரவ விட்டு ஒரு தேர்ந்த தொழிலாளிபோல தரையைத் துடைத்துக் கொண்டிருந்தான்.

உடல்முழுக்க வியர்வையில் குளித்திருந்தான். உடல் சோர்ந்த நிலையில் பலவீனத்தின் காரணமாக சுவாசப் பை பெரிதாக விரிந்து புஸ்.. புஸ்..என நல்லப் பாம்பாய் சீறிக்கொண்டிருக்க அவன் கவனம் முழுதும் வேலையிலிருந்தது.

"மூர்த்தி..! மூர்த்தி..!"

www.tamilarangam.net



அரவிந்தனின் எதிர்பாராத இந்தக்குரல் அவனைத் திகைப்பில் ஆழ்த்தியிருக்கவேண்டும். திடுக்கிட்டுத் திரும்பினான்.

அவனது கண்களில் திகைப்பும் ஆச்சரியமும் தெளிவாகத் தெரிந்தது. கண்களில் முத்துக்களாய் நீர்த் துளிகள்.. கண்ணீரா? வியர்வைத் துளிகளா? புரிந்து கொள்வது சிரமமாக இருந்தது.

"வாங்கண்ணா"!! மூர்த்தின் குரல் தழு தழுத்தது.

அரவிந்தன் அவனை நெருங்கி அவனது கைகளை ஆதரவாகப் பற்றினார். தண்ணீரில் இருந்ததாலோ என்னவோ கைகள் ஜில்லிட்டு, சோகையாய் வெளுத்து உள்ளங்கையில் பாசிக்கோடுகளாக நரம்புகள் இங்கும் அங்குமாக பளிச்சென்று தெரிய, விரல்களுக்கிடையில் சதைகிழிந்து ரத்த கசிவுகள்..

காணச் சகியாமல் கைகளை உதறிவிட்டு அவனது தோளை வாஞ்சையாக பற்றி ஆறுதல் சொன்னார். இப்பொழுது இவரது இதயம் கனக்க ஆரம்பித்திருந்தது.

" வாங்க மிஸியே!.. எப்ப வந்தீங்க!.. வெளிப்பட்டார் கந்தசாமி.கிழிந்த பனியனும், கசங்கிய லுங்கியமாக இருந்த அவரது தோற்றம், இவருக்கு சிரிப்பூட்டியது.

"......"

"என்னது சொல்லாம கொள்ளாம திடீர்னு வந்து நிக்கறீங்க! ஒரு போன் பண்ணிட்டு வந்திருக்கலாமே!"

"போன்மூர் மிஸியே கோபிச்சுக்காதீங்க! நான் இந்த பக்கம் ஒரு வேலையா வந்தேன்.அப்படியே பையன் எப்படி இருக்கிறான்னு பாத்துட்டு போகலாம்னு வந்தேன்".

"......"

"அப்ப நான் வறேன்" அரவிந்தன் கிளம்பத் தயாரானார்.

"இருங்க! இவ்வளவு தூரம் வந்துட்டுஒண்ணும் குடிக்காமப் போனா எப்படி?"

"பர்தோன் மிஸியே, கோவிச்சுக்காதிங்க. நான் போகனும்"

"அண்ணே, இருங்கண்ணே...!" மூர்த்தியின் குரலில் பதட்டம்.

" நீ வாளியையும், மற்றதையும் கொண்டுபோய் வைத்துவிட்டு வேற உடுப்போட வா! அவர் போகமாட்டார்".

தயங்கி, தயங்கி சென்ற மூர்த்தியை திரும்பவும் பார்க்க முடியுமா என்ற கேள்வி அவர் மனத்தில் எழுந்தது.

"மிஸியே!.. என்ன குடிக்கிறீங்க? விஸ்கி.. மர்த்தினீக்.. பியர் எல்லாம் இருக்குது."

" கோபிச்சுக்காதீங்க, நான் அவசியம் போகனும்."

"இல்ல காப்பியாவது குடிச்சுட்டுத்தான் போகனும்"

இம்முறை மறுக்கவில்லை, ஒருவேளை மூர்த்தியை மறுபடியும் பார்க்க வாய்ப்பு கிடைக்க கூடும் என்று நம்பினார்.

" கமலா! மிஸியேக்கு கொஞ்சம் கஃபே கொண்டுவா."

கமலா கந்தசாமியின் மனைவி.

" கொஞ்சமிருங்க. இதோ வரேன்" என்று சொல்லிவிட்டு மறுபடியும் கந்தசாமி உள்ளே சென்று மறைந்துவிட்டார்.

அரவிந்தன், கொஞ்ச நேரம் காத்திருந்தார். காத்திருந்தது வீண்போகவில்லை. கஃபேயை கொண்டுவந்தது மூர்த்தியே. அவனிடம் அவசர அவசரமாக தன் வீட்டு முகவரியைக் கொடுத்தவர்.

"ஞாயிற்றுக்கிழமை வீட்டுக்கு வாஎன ரகசியமாக அவனிடம் சொல்லிவைத்தார்

மூர்த்தியின் கண்களில் முதன் முறையாக ஒளியைப் பார்த்தார்.

" என்ன மிஸியே சக்கரை திட்டமாக இருக்குதா"

கேட்டுக்கொண்டே கந்தசாமி வெளியே வந்தார்.

"எல்லாம் சரியாய் இருக்கு. ரொம்ப மெர்ஸி மிஸியே. பையனை கொஞ்சம் கவனிச்சுக்குங்க"

"கவலைப்படாம போய்ட்டு வாங்க, இப்பத்தான் கொஞ்சம் கொஞ்சமா வேலையைக் கத்துகறான்(!). இனிப் போக போக சரியாயிடும்".

* * *

ஞாயிற்று கிழமையும் வந்துவிட்டது. அரவிந்தன் வீட்டில் அனைவருமே மூர்த்தியை எதிர்பார்த்து காத்திருந்தார்கள். மணி காலை 9 இருக்கும். அழைப்பு மணி சப்தம் கேட்டு அரவிந்தன் கதவைத் திறந்தார். அங்கே மூர்த்தி.

இவரைப் பார்த்தவுடன் ஒரு குழந்தையைப் போல தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டான்.

(தொடரும்)



**<u>உலக நாடுகளின் நேரம் மாற்றம்</u>**

உலகின் பல்வேறு நாடுகளிலமார்ச29முதல்ஒரு மணி நேரம் மாற்றம் உள்ளது. பனிகாலத்திலிருந்து. கோடைகாலத்திற்கு மாறும் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் இந்த மாற்றம் நிகழும்.

உலகிலுள்ள கடிகாரங்கள் அனைத்திலும் இந்த மாற்றம் செய்யப்படும். அதிகாலை 2 மணி முதல் இந்த ஒரு மணிநேர மாற்றம் அமுலுக்கு வரும். அப்போது கடிகார முட்கள் ஒருமணிநேரம் முன்னே தள்ளப்பட்டு 3 மணியாகத் திருத்தியமைக்கப்பட வேண்டும்.

அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளில், இந்த நேர மாற்றம் ஏப்ரல் மாதம் 5-ம் தேதி அதிகாலை 2 மணியிலிருந்து அமுலுக்கு வரும்.

www.tamilarangam.net





## தமிழ்நாட்டுக்கு 7 மந்திரிகள்: வாஜ்பாய் தலைமையில் 43 அமைச்சர்கள் பதவி ஏற்றனர் ஜனாதிபதி பதவி பிரமாணம் செய்து வைத்தார்

புதுடெல்லி, மார்ச் 20–

பாரதிய ஜனதா கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் வாஜ்பாய் பிரதமராக பதவிப் பிரமாணமும் ரகசிய காப்பு பிரமாணமும் எடுத்துக் கொண்டார்.

வாஜ்பாய்க்கு பதவிப்பிரமாணத்தையும் ரகசியகாப்பு பிரமாணத்தையும் செய்து வைத்த ஜனாதிபதி கே.ஆர். நாராயணன், மேலும் பா.ஜ.க. கூட்டணியைச் சேர்ந்த 22 கேபினட் அமைச்சர்களுக்கும், 21 இணை அமைச்சர்களுக்கும் பதவிப் பிரமாணமும் ரகசியகாப்பு பிரமாணமும் செய்து வைத்தார்.

### வி.பி.சிங்– சோனியாகாந்தி

ஜனாதிபதி மாளிகைக்கு முன்பு உள்ள மைதானத்தில் 90 நிமிடங்கள் நடந்த இந்த நிகழ்ச்சியில் உதவி ஜனாதிபதி கிருஷ்ணகாந்த், முன்னாள் ஜனாதிபதி ஆர்.வெங்கட்ராமன், எஸ்.டி.சர்மா, முன்னாள் பிரதமர்கள் வி.பி.சிங், சந்திரசேகர், பி.வி.நரசிம்மராவ், தேவகவுடா, ஐ.கே.குஜ்ரால், காங்கிரஸ் கட்சி தலைவர் சோனியாகாந்தி, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா மற்றும் மாநில முதல்வர்கள் உட்பட ஏராளமான பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

### கேபினட் அமைச்சர்கள்

பிரதமர் வாஜ்பாய்யை தவிர பா.ஜ.க.வை சேர்ந்த 10 பேர் கேபினட் அமைச்சர்களாக பிரமாணம் எடுத்துக் கொண்டுள்ளனர். அவர்கள் அக்கட்சியின் அகில இந்தியத் தலைவர் எல்.கே.அத்வானி, ஆனந்தகுமார், சிக்கந்தர்பக்த்,

சத்தியநாராயண ஜாட்டியா, முரளி மனோகர்ஜோஷி, மதன்லால் குரானா, ரங்கராஜன் குமாரமங்கலம், காஷிராம் ராணா, யஷ்வந்த் சின்ஹா, திருமதி சுஷ்மா சுவராஜ் ஆகியோராவர்.

ஏனைய கேபினட் அமைச்சர்கள் ஜார்ஜ் பெர்ணான்டஸ், நீதிஷ்குமார் (இருவரும் சமதா கட்சி) தம்பித்துரை, சேடப்பட்டி முத்தையா (இருவரும் அ.தி.மு.க.), ராம்ஜெத்மலானி, பூடாசிங் (சுயேச்சைகள்), எஸ்.எஸ். பர்னாலா (அகாலிதளம்), ஆர்.கே.ஹெக்டே (லோக்சக்தி), சுரேஷ்பிரபாகர் பிரபு (சிவசேனா), நவின் பட்நாய்க் (பிஜூ ஜனதா தளம்), வாழப்பாடி ராமமூர்த்தி (தமிழ்நாடு ராஜீவ் காங்கிரஸ்) ஆகியோராவர்.

### இணை அமைச்சர்கள்

பிரதமர் வாஜ்பாய் உட்பட 43 பேர்களைக் கொண்ட அமைச்சரவையில் 21 பேர் இணை அமைச்சர்களாவர். தமிழ்நாட்டை சேர்ந்த 7 பேர் அமைச்சர்களாக பதவி ஏற்றுள்ளனர். இதில் தம்பிதுரை, சேடப்பட்டி முத்தையா, மற்றும் பாரதிய ஜனதாவின் ரங்கராஜன் குமாரமங்கலம், வாழப்பாடி ராமமூர்த்தி ஆகியோர் காபினட் அமைச்சர்களாகவும், அ.தி.மு.க. வைச் சேர்ந்த ஆர்.கே.குமார், கடம்பூர் ஜனார்த்தனம் மற்றும் பா.ம.க. எம்.பி. தலித்எழில்மலை ஆகியோர் இணை அமைச்சர்களாகவும் பதவி ஏற்றனர்.



## தேர்தல் தோல்வியிலிருந்து மீண்டு மக்கள் நம்பிக்கையை பெறுவோம் காங். மாநாட்டில் சோனியா பேச்சு

### தலைவராக அங்கீகாரம்

அகில இந்திய காங்கிரஸ் தலைவராக சோனியா காந்தியை செயற்குழு நியமித்ததற்கு முழுமையான அங்கீகாரம் பெறுவதற்காக கூட்டப்பட்ட அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் சோனியாவை தலைவராக தேர்வு செய்யும் தீர்மானத்தை சீதாராம் கேசரி கொண்டு வந்தார்.அதன்பின் பெரும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் இந்த தீர்மானம் நிறைவேறியது.

பின்னர் அவர் தனது மாநாட்டு உரையை நிகழ்த்தினார்.
அப்போது அவர் கூறியதாவது:–

மிகவும் நெருக்கடி மிகுந்த காலத்தில் இந்த பொறுப்பை நான் ஏற்றுள்ளேன். தேர்தல் தோல்விகளுக்குப் பின் நமக்கு மிகப் பெரிய கடமை உள்ளது. நாம் மிகவும் ஒற்றுமையுடனும் ஐக்கியத்துடனும் இருந்து நம்முன் உள்ள சவால்களைச சந்திக்க வேண்டும். நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பல்கி பெருகி உள்ளன. அவைகளை சந்தித்து தீர்வு காணும் வகையில் நாம் கடமையாற்ற வேண்டும்.
மக்கள் நம்பிக்கையை நாம் பெற வேண்டும். தேர்தல் தோல்வியிலிருந்து மீண்டு தோல்விகளுக்கான படிப்பினையைப் பெற்று மக்களின் நம்பிக்கைக்கு ஆளாக வேண்டும்.

கட்சியில் ஒழுக்கமின்மையையும் அலட்சியபோக்கையும் மாற்ற வேண்டும். இதற்கு இளம் ரத்தம் பாய்ச்சப்பட வேண்டும். இதற்காக பல்வேறு கமிட்டிகளை அமைக்க உள்ளேன்.

### கடுமையான முயற்சி

என்னுடைய கணவர் பம்பாய் மாநாட்டின்போது கட்சியின் பழைய மரபுகளையும் கலாச்சாரத்தையும் உயர்த்தி பிடிக்க அறை கூவலிட்டார். அதன்படி நாம் மாற்ற வேண்டும்.

### ஆளுமை திறன்

காங்கிரஸ் கட்சி மட்டும்தான் இந்த நாட்டில் ஆளுமையுள்ள கட்சி. மதசார்பின்மையை இன்னமும்விடாத கட்சி அது. இளைஞர்களின் துடிப்பும் முதியவர்களின் அனுபவமும் கொண்டது. .

### சொத்துக்களை அறிவிக்க வேண்டும்

தலைவர்கள் மக்கள் நம்பிக்கைக்கு உரியவர்களாக செயல்பட வேண்டும். கட்சி நிர்வாகிகள் தங்களுடைய வருமானத்தில் ஒரு பகுதியை கட்சிக்கு அளிக்க வேண்டும். அதோடு அவர்கள் தங்கள் சொத்துக்களையும், வருமானத்தையும் வருடந்தோறும் அறிவிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## கன்னியாகுமரி: திருவள்ளுவர் சிலை கின்னஸில் இடம் பெறும் அமைச்சர் முல்லை வேந்தன் தகவல்

### திருவள்ளுவர் சிலை

கன்னியாகுமரியில் விவேகானந்தா நினைவுச் சின்னத்திற்கு அருகில் இருக்கும் பாறையில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை அமைய விருக்கிறது. இதன் ஆதாரபீடம் 38 அடி உயரம். இதன் மேல் அமைய விருக்கும் திருவள்ளுவர் சிலை 95 அடி உயரமும், சிலையின் உட்பாகத்தில் பாகத்தில் இருந்து தலைவரை மேலே ஏறிச் செல்ல படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்பாக பீடம் 672 கற்களாலும், சிலை 1283 கற்களாலும், இதன் சுற்று சுவர் 1726 கற்களாலும் அமைய பெற்றுள்ளது. மொத்தம் 7 ஆயிரம் டன் எடையுள்ள கற்கள் இதற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. இதற்காக மொத்தம் ரூ.6.14 கோடி செலவிடப்படுகிறது. இந்த சிலை தலைமை சிற்பி கணபதி ஸ்தபதியால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### கின்னஸ் சாதனை

இதுவரை இது போன்று ராட்சத அளவில் எந்த சிலையும் கடலினுள் அமைக்கப்படவில்லை. இதனால் இந்த சிலை கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறுவது உறுதி என்று அமைச்சர் முல்லை வேந்தன் தெரிவித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ரூபாய் மதிப்பை ஸ்திரப்படுத்துவோம் புதிய நிதியமைச்சர் சின்கா பேட்டி

ரூபாய் மதிப்பை ஸ்திரப்படுத்துவோம் என்று புதிதாக நிதியமைச்சர் பொறுப்பு ஏற்றுள்ள யஷ்வந்த் சின்கா கூறியுள்ளார்.

### அச்சம்

பாரதிய ஜனதா அரசு ஆட்சிக்கு வந்தால் நிதித்துறையில் என்ன மாற்றம் ஏற்படும் என்று தொழில், வர்த்தகம் மற்றும் நிதித்துறை வட்டாரங்களில் பெருத்த கேள்வி ஏற்பட்டிருந்தது. காங்கிரஸ் அரசு கொண்டு வந்த பொருளாதார சீர்திருக்கம் பின்னோக்கி செல்லமுடியாத அளவுக்கு இந்தியாவில் நிலை கொண்டுவிட்டது. மன்மோகன்சிங் கொண்டுவந்த சீர்திருத்தத்தையே ஐ.மு. ரசும் தொடர்ந்து கடைப்பிடித்தது. நிதியமைச்சர் ப.சிதம்பரம் இதன் தொடர்ச்சியை கையாண்டார். ஆகையால் பா.ஜ.க. அரசு இதைத் தொடருமா? என்ற கேள்வி இருந்தது.

தென் கிழக்காசியாவில் பொருளாதார சீர்திருத்தம் வந்ததையடுத்து பணத்தின் மதிப்பு சீரழிந்தது. அதை சீர் செய்ய உலக வங்கி, நடவடிக்கை எடுத்துள்ளது. அதுபோல இங்கும் பணத்தின் மதிப்பு வீழ்ச்சியடையுமா? என்ற அச்சமும் இருந்தது. இதை புதிய அரசு எப்படி கையாளும்? .

மேலும் பா.ஜ.க. ஆட்சி பொறுப்பை ஏற்றால் கொள்கை ரீதியான பிரச்சினைகளும் இருந்தது. வெளிநாட்டு மூலதனத்தைவிட உள்நாட்டு மூலதனத்தை பெருக்கவும், அன்னிய நிறுவனங்களை சார்ந்து இருப்பதற்கு பதிலாக சுதேசியத்தை சார்ந்து இருப்பதாகவும், தொழில் துறையின் பிரமாண்ட வளர்ச்சி என்பதற்கு பதிலாக விவசாயமும் பெருகவேண்டும் என்றும், பா.ஜ.க. தனது தேர்தல் அறிக்கையில் கூறியிருந்தது. மேலும் பா.ஜ.க.வின் கூட்டணி கட்சியான சமதா கட்சித் தலைவர் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு எதிரான இயக்கத்திற்கு தலைமை தாங்கி அவைகளுக்கு எதிராக பேசிவந்தார்.

பொருளாதார சீர்திருத்தத்தின் விளைவாக பன்னாட்டு நிறுவனங்களுடன் ஒப்பந்தம் மேற்கொண்ட இந்திய தொழில் துறையினர் மத்தியில் இது அச்சத்தை உருவாக்கியது. இதுபற்றிய அச்சத்திற்கு பதிலளிக்கும் வகையில் புதிய நிதியமைச்சர் யஷ்வந்த் சின்கா பதிலளித்தார்.



நிருபர்களிடம் அவர் பேசும்போது கூறியதாவது:-

### அச்சம் தேவையில்லை

புதிய அரசு மிக முக்கியமான துறைகளில் செலவினங்களைப் பெருக்கி பொருளாதார வீழ்ச்சியடைவதை தடுத்து நிறுத்த உள்ளது.

தெற்காசியாவில் வந்த பணத்தின் மதிப்பு வீழ்ச்சியடைந்ததுபோல ஒரு நிலைமை ஏற்படாத வகையில் பணத்தின் மதிப்பை ஸ்திரப்படுத்துவோம். இது சம்பந்தமாக ரிசர்வ் வங்கி கவர்னருடன் நான் பேசுவேன்.

வெளிநாட்டு நிறுவனங்கள் இந்தியாவில் முதலீடு செய்ய அச்சப்பட தேவையில்லை. பா.ஜ.க.வின் பொருளாதார கொள்கை பாதுகாப்பு இன்மையை உருவாக்கும் என்று அவர்கள் கருத வேண்டாம். பன்னாட்டு நிறுவனங்கள் மத்தியில் இந்த அச்சம் தேவையில்லை. அன்னிய மூலதன முதலீட்டார்கள் நிறுவனத்துடன் நான் இது சம்பந்தமாக பேச உள்ளேன். எந்த, எந்த துறைகளில் அன்னிய மூலதனம் தேவைப்படுமோ அந்த, அந்த துறைகளில் அவை அனுமதிக்கப்படும். பன்னாட்டு நிறுவனங்களைக் கையாள்வதில் நாங்கள் வெளிப்படையாக இருப்போம். இதில் எங்களுக்கு எந்த தயக்கமும் இல்லை.

முன்னுரிமை தேவைப்படும் துறை என்பது தெளிவாக்கப்படும். நுகர்வோர் பொருட்கள் தொடர்புள்ள துறைகளில் அன்னிய நிறுவனங்களின் முதலீடு பெருக வாய்ப்புள்ளது. இதில் உள்ள தடைகள் அகற்றப்படும்.

பொருளாதாரத்தில் வீழ்ச்சியைத்தடுத்து நிறுத்துவதே உடனடித் தேவையாகும். பொதுத்துறை மற்றும் தனியார் துறையில், குறிப்பாக கட்டுமானத் துறையில் மூலதனத்தை அறிமுகப்படுத்த வேண்டும்.

இதற்கு ஏற்றுமதியை அதிகப்படுத்த வேண்டும். ஏற்றுமதியை அதிகப்படுத்தும் புதிய செயல்திட்டம் ஒன்றை அரசு விரைவில் அறிவிக்கும். ஏற்றுமதியை பெருக்குவதன் மூலம் பணத்தின் மதிப்பை ஸ்திரப்படுத்த முடியும்.

மேலும் 1991-ல் துவக்கிய பொருளாதார சீர்திருத்தம் சரியான திசை வழியில் எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கை என்பதில் நாங்கள் தெளிவாக உள்ளோம்.

இந்த பொருளாதார சீர்திருத்தத்தில் சில துறைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அதனால் அவை எதிர்பார்க்கப பட்டதுபோல இல்லாமல் சரியான சீர்திருத்தம் நடக்கவில்லை. ஆகையால் தேவைப்படும் இடத்தில் இவை சரிசெய்யப்பட வேண்டியுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## ஜெயலலிதா மீதான வழக்குகளை விரைவில் முடிக்க திட்டம்

ஜெயலலிதா மீதுள்ள வழக்குகளை விரைவில் முடிக்க திட்டமிடப் பட்டுள்ளது. ஜெயலலிதா மீது மத்திய அரசும், மாநில அரசும் ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குகள் போடப்பட்டு இது தொடர்பாக ஜெயலலிதா பல முறை சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜராகி 2 வழக்குகளில்குற்றப்பத்திரிகைகளும் வாங்கி உள்ளார்.

. அ.தி.மு.க.வைச் சேர்ந்த தம்பிதுரை, சட்ட அமைச்சராக பொறுப்பேற்று சென்னை வந்தவுடன் நிருபர்களிடம் கூறும்போது, ஜெயலலிதா மீது போடப்பட்ட வழக்குகள் பொய் வழக்குகள். புதிய அரசு இந்த வழக்குகளை விசாரித்து அதில் கவனம் செலுத்தும் என்று தெரிவித்துள்ளார்.

மத்தியில் உள்ள அதிகாரத்தை பயன்படுத்தி இந்த வழக்குகள் எப்படி தொடரப்பட்டது? ஏன் தொடரப்பட்டது? என்பதை ஆராய்ந்து இந்த வழக்குகளை உடனே முடித்துவிட தம்பித்துரை முயற்சிப்பார் என்று தெரிகிறது. அந்த வகையில் ஜெயலலிதா மீதான வழக்குகள் விரைவில் முடிந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மோதல் போக்கை நாம் கைவிட வேண்டும் டி.வி.யில் வாஜ்பாய் பேச்சு

தேசத்தின் முன்னுள்ள சவால்களை கருத்தொற்றுமை மூலம் எதிர்கொண்டு முன்னேற வேண்டும் என பிரதமர் வாஜ்பாய் கூறியுள்ளார்.

### தொலைக்காட்சி மூலம்

தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பிரதமர், நம்மிடையே உள்ள மோதல் போக்கை கைவிட்டு ஒருவருக்கு ஒருவர் உதவும் நல்ல நெறிமுறையை கடைபிடிக்க முன்வர வேண்டும் என்று கூறினார்.

நாட்டின் 12-வது மக்களவை துவங்க உள்ள நிலையில் தொலைக்காட்சி மூலம் பிரதமர் நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார்.

அரசியலில் எதிர்மறை அணுகுமுறை பல மோதல்களை ஏற்படுத்தி விட்டது. ஆனால் தேர்தல் முடிவுகள் எதிர்எதிராக இருந்த அனைவரும் சேர்ந்து செயல்பட வேண்டும் என்ற நிலைய ஏற்படுத்தி விட்டது. தேச அரசியலில் பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் கூட்டாட்சி மூலம் தேசத்தை முன்னேற்ற வேண்டும் என்று மக்கள் தீர்ப்பளித்துள்ளனர். ஒருவர் காலை மற்றவர் வாரி விடுவது என்ற அணுகுமுறையால் இந்தியா அதிக துயரங்களை அனுபவித்து விட்டது. நாம் நம்முடைய மோதல் பாதையை கைவிட வேண்டும் என்று தான் உளப்பூர்வமாக நம்புவதாக கூறினார்.

### புதிய கொள்கை

உடனடியாக மேற்கொள்ள உள்ள திட்டங்கள் குறித்து குறிப்பிட்ட பிரதமர், நாட்டின் உணவு உற்பத்தியை அதிகப்படுத்தவும், உள்கட்டுமான துறைகளை பலப்படுத்தவும், சமூக அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யவும் புதிய அரசு திட்டமிடும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அதிகப்படுத்தவும், உள்கட்டுமான துறைகளை பலப்படுத்தவும், சமூக அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யவும் புதிய அரசு திட்டமிடும். நதிநீர் குறித்து தேசிய அளவில் புதிய கொள்கை உருவாக்கப்படும். அண்டை நாடுகளுடனான உறவுகளை பலப்படுத்த எல்லா வகையிலும் முயற்சிக்கப்படும் என்று குறிப்பாக பாகிஸ்தானுடனான உறவை மேலும் பலப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

புதிய அரசு மதச்சார்பற்ற கொள்கை மீது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளதாக குறிப்பிட்ட பிரதமர் நாட்டின் எல்லா மதத்தவரும் ஒன்றாக இணைந்து பலமான இந்தியாவை உருவாக்க வேண்டும் என்றார். 21-ம் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்க உள்ள இந்தியாவில் பொதுவாழ்வில் நேர்மையை உருவாக்கவும் நாட்டின் அரசு மற்றும் பொதுநிறுவனங்களை சுதந்திரமாக செயல்படும் அமைப்புகளாக உருவாக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

## உலக சந்தையில்

பொருளாதார உலக மயமாக்கல் பற்றி குறிப்பிட்ட வாஜ்பாய், உலக சந்தையில் இந்தியாவை தூக்கி நிறுத்த தனது அரசு பாடுபடும் என்றும், இதற்கு அர்த்தம் உலக பொருளாதார சந்தையில் இந்தியா தனித்து நிற்பது அல்ல, மாறாக இந்தியா தனது திறமையை வளர்த்துக் கொண்டு அதன் அடிப்படையில் உலக சந்தையில் தனி இடம் பிடிக்க வேண்டும் என்பதுதான் என்று விளக்கினார்.

வியாபார ஆதிக்க சக்திகள் குறித்து இந்திய வர்த்தகத்துறை பயப்பட தேவையில்லை. இந்தியாவின் பாசுமதி அரிசி, மஞ்சள் ஆகியவற்றை அமெரிக்க நிறுவனம் அறிவு சொத்துரிமை பெற முயற்சிப்பதை எதிர்த்து குரல் கொடுப்பது சரியானதே. அதே நேரத்தில் இந்தியா மேலும் பல பொருட்களின் அறிவு சொத்துரிமை உரிமையாளராக மாற வேண்டும்.

## புதிய அரசு

தேசத்தின் அடிதட்டு மக்களான தாழ்த்தப்பட்டோர், பழங்குடி மக்கள், சிறுபான்மையினர், ஏழைகள் ஆகியோரை இன்றுவரை ஓட்டு வங்கியாகத்தான் பயன்படுத்தி வந்துள்ளார்கள். அவர்களின் வறுமையை ஒழிக்கவும், அவர்களுக்கு கல்வி கொடுக்கவும் புதிய அரசு பாடுபடும்.

பெண்களுக்கு நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் இடஒதுக்கீடு அளிக்கப்படும்.

மத்திய-மாநில உறவுகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். முதல் கட்டமாக ரூ.1,500 கோடி வரை மூலதனம் தேவைப்படும். மின் உற்பத்தி திட்டங்களை மாநில அரசுகளே முடிவு செய்து கொள்ள அனுமதி வழங்கப்படும் என்றும் பிரதமர் வாஜ்பாய் தனது உரையில் குறிப்பிட்டார்.

இறுதி விவரம்
1 FF : 6.47Rs.
1 சுவிஸ் : 33.12Rs.
1 கிராம் : 4.14Rs.

## பாராளுமன்ற சபாநாயகராக பாலயோகி தேர்வு குரல் வாக்கெடுப்பில் சங்மா தோல்வி அடைந்தார்



பாரதிய ஜனதா கட்சி கூட்டணி சார்பில் தெலுங்கு தேசக் கட்சியை சேர்ந்த ஜி.எம்.சி. பாலயோகி 12-வது மக்களவை சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

47 வயதுள்ள பாலயோகி மக்களவையில் முதலாவது தலித் சபாநாயகராக பதவி ஏற்றார். இவர் காங்கிரஸ், ஐக்கிய முன்னணி வேட்பாளர் பி.ஏ.சங்மாவை தோற்கடித்தார்.

### சபாநாயகர் தேர்தல்

மத்தியில் வாஜ்பாய் தலைமையிலான பாரதிய ஜனதா கூட்டணி அரசு பொறுப்பேற்றுள்ளது. 539 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றத்தில் பாரதிய ஜனதா அரசுக்கு 264 உறுப்பினர்கள் ஆதரவுதான் உள்ளது. இதனால் பாராளுமன்ற சபாநாயகர் தேர்தல் பாரதிய ஜனதா அரசுக்கு ஒரு பலப்பரீட்சை என்று கருதப்பட்டது. சபாநாயகர் தேர்தலில் போட்டியிடுவோம் என்று காங்கிரஸ் அறிவித்தது. காங்கிரஸ் வேட்பாளரை ஆதரிப்போம் என்று ஐக்கிய முன்னணியும் அறிவித்தது.

### பா.ஜனதா கோரிக்கை

ஆளும் கட்சி நாங்கள் என்பதால் சபாநாயகர் பதவியை எங்களுக்கு விட்டு கொடுக்க வேண்டும் என்றும், துணை சபாநாயகர் பதவியை காங்கிரசுக்கு கொடுக்க தயார் என்றும் பாரதிய ஜனதா கோரிக்கை விடுத்தது. இந்த கோரிக்கையை ஏற்க காங்கிரசும், ஐக்கிய முன்னணியும் மறுத்துவிட்டது. சபாநாயகர் தேர்வின்போதே பலப்பரீட்சையில் ஈடுபட பாரதிய ஜனதா விரும்பாததால், சங்மாவை தேர்ந்தெடுக்க தொடக்கத்தில் ஒப்புக் கொண்டது. இதனால் சங்மா மீண்டும் சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

### திடீர் திருப்பம்

சபாநாயகர் தேர்தலிலும் நடுநிலை வகிப்பேன் என்று தெலுங்கு தேச தலைவர் சந்திரபாபு நாயுடு அறிவித்தார். இதனால் பாரதிய ஜனதாவுக்கு 264 எம்.பி.க்கள் ஆதரவு இருந்தாலே தேர்தலில் வெற்றி பெற போதுமானது. எனினும் ஒரு எம்.பி. மாறினாலும் அரசுக்கு சிக்கல் ஏற்படும். இதனால் மாற்று வழியை வாஜ்பாயும், அத்வானியும் ஆலோசித்தனர்.

நடுநிலைமை வகிக்கும் தெலுங்கு தேசத்தையே சபாநாயகர் தேர்தலில் நிற்க வைத்தால், நாம் ஆதரிக்கும் வேட்பாளர் வெற்றி பெற வாய்ப்பு உண்டு என்று இருவரும் முடிவு செய்தனர்.

அதுவும் ஒரு தலித்தை வேட்பாளராக நிறுத்துவதால், காங்கிரஸ் நிறுத்தும் மலை சாதி இனத்தவரான சங்மாவுக்கு சரியான போட்டியாக இருக்கும் என்று கருதினார்கள். இதுகுறித்து சந்திரபாபு நாயுடுவுடன் வாஜ்பாய் பேசினார். வாஜபாயின் யோசனையை சந்திரபாபு நாயுடு ஏற்றுக் கொண்டார்.

### சங்மா மனு தாக்கல்

ஆனால் பாரதிய ஜனதா அதிரடியாக தெலுங்கு தேச எம்.பி. பாலயோகி தங்கள் கட்சி சார்பில் போட்டியிடுவார் என்று அறிவித்ததை தொடர்ந்து, சபாநாயகர் தேர்தலில் போட்டி தவிர்க்க முடியாததாகிவிட்டது.

### பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு

இதை தொடர்ந்து நேற்று மாலை 4 மணிக்கு பாராளுமன்றத்தில் சபாநாயகர் தேர்தல் நடந்தது. தற்காலிக சபாநாயகர் இந்திரஜித் குப்தா இந்த தேர்தலை நடத்தினார்.

குரல் வாக்கெடுப்பு மூலம் ஓட்டெடுப்பு நடைபெறும் என்று தெரிவித்தார். முதலில் அவர், பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் சரத்பவாரை, சங்மாவை ஆதரிக்கும் தீர்மானத்தை முன்மொழிய அழைத்தார். இதை தொடர்ந்து சங்மா போட்டியிடுவதற்கான தீர்மானத்தை சரத்பவார் முன்மொழிந்தார். இந்த தீர்மானம் மீது இந்திரஜித்குப்தா ஓட்டெடுப்பு நடத்தினார்.

தீர்மானத்தை எதிர்ப்பவர்கள் அதிகம் என்பதால் சங்மாவை தேர்ந்தெடுக்கும் தீர்மானம் தோல்வி அடைந்ததாக இந்திரஜித் குப்தா அறிவித்தார்.

### பாலயோகி தேர்வு

பின்னர் பாலயோகியை சபாநாயகராக தேர்ந்தெடுக்கும் தீர்மானத்தை முன்மொழியும்படி வாஜ்பாயை, இந்திரஜித் குப்தா கேட்டுக் கொண்டார். தீர்மானத்தை வாஜ்பாய் முன்மொழியவே, அதன் மீது ஓட்டெடுப்பு நடத்தினர். இதில் தீர்மானத்தை ஆதரிப்பவர்கள் அதிகம் என்பதால், பாலயோகியை சபாநாயகராக தேர்ந்தெடுக்கும் தீர்மானம் வெற்றி பெற்றதாக இந்திரஜித் குப்தா அறிவித்தார்.

### முதல் தலித்

12-வது பாராளுமன்ற சபாநாயகராக தேர்ந்தெடுக்கப்பட்ட பாலயோகி, சபாநாயகரான முதல் தலித் ஆவார். வழக்கறிஞரான அவருக்கு வயது 47.

ஆளும் பாரதிய ஜனதா, சபாநாயகர் தேர்தலின் மூலம் ஏற்பட்ட முதற்கட்ட சோதனையில் அமோக வெற்றி பெற்றது. அடுத்து நம்பிக்கைகோரும் தீர்மானத்தில் பெறும் வெற்றிக்கு இது ஒரு முன்னறிவிப்பு. அதிலும் வெற்றி பெற்று பாரதிய ஜனதா ஆட்சி நீடிக்க சந்திரபாபு நாயுடுவின் ராஜதந்திரம் பயன்பட்டது என்று அரசியல் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

www.tamilarangam.net



சந்திரபாபு நாயுடுவின் ராஜதந்திரம் பயன்பட்டது என்று அரசியல் நிபுணர்கள் கூறுகிறார்கள்.

## புதுவை மாநிலத்தில் 14 வயது வரை கட்டாய கல்வி புதிய ஏற்றுமதி வளாகம் ரூ.52 கோடியில் புறவழிச்சாலை கவர்னர் உரையில் அறிவிப்பு

புதுவை மாநிலத்தில் 14 வயது வரை கட்டாய கல்வியும், ஏற்றுமதிக்காக புதிய வளாகமும், ரூ.52 கோடியில் புறவழிச்சாலையும் ஏற்படுத்த உள்ளதாக கவர்னர் உரையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுவையின் தொழில் கொள்கைக்கு ஏற்ப புதுவையின் தொழில் வளர்ச்சி முன்னுரிமை பெறும் விஷயங்களில் ஒன்று ஏற்றுமதியின். மேம்பாட்டிற்காக, சேதராப்பட்டில் ஏற்றுமதி பகுதி ஒன்றை அமைக்க உத்தேசம் உள்ளது. வேளாண் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலைகளின் கட்டமைப்பு வசதிகளுக்காக மத்திய அரசு மற்றும் சிறுதொழில் வளர்ச்சி வங்கி உதவியுடன் ஒருங்கிணைந்த தொழில் வளர்ச்சி திட்டம் ஒன்றுக்கு திட்டமிடப்பட்டு வருகிறது. கயிறு வாரியத்தின் தொழில்நுட்ப உதவியுடன் கயிறு வளர்ச்சிமையம் ஒன்று புதுவையில் அமைத்திட உத்தேசம் உள்ளது.

### கட்டிடகலை பாதுகாப்பு

பாரம்பரியம்மிக்க கட்டிடங்களை பாதுகாப்பதில் அரசு முக்கியத்துவம் அளிக்கிறது. தற்போதுள்ள அருங்காட்சியகம் சீர் செய்யப்பட்ட கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. இக்கட்டிடம் ரூ.14 லட்சம் செலவு செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது. இதே போன்று பழைய கலங்கரை விளக்க கட்டிடம் ரூ.2 லட்சம் செலவில் பாதுகாக்கப்பட்டுள்ளது. வாடகை கட்டிடத்தில் இயங்கி வந்த ஆவணக்காப்பகம் வேறு கட்டிடத்திற்கு மாற்றப்படுகிறது. அருங்காட்சியகத்தில் புதுவை நகரின் வரலாறு பற்றி ஒரு கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. இதனால் மத்திய பூங்காவைச் சுற்றி பாரம்பரியம் மிக்க வளாகங்கள் அமைய ஏதுவானது.

### மீன் பிடி துறைமுகம்

புதுவை மற்றும் காரைக்காலில் மீன் பிடித் துறைமுகம் பணிகளை விரைவில் முடித்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உலக வங்கி உதவியுடன் சாலைகளை மேம்படுத்துவதற்கான நமது திட்டத்திற்கு நடுவண் அரசு ஒப்புதல் அளித்துள்ளது இத்திட்டத்தின் கீழ் அரியாங்குப்பம் ஆற்றின் மீது பாலம் கட்டவும், காரைக்காலில் புறவழிச்சாலை ஒன்றை அமைத்திடவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது. உலக வங்கியிடமிருந்து ரூ.52 கோடி உதவி கிடைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இத்தொகை வரவு – செலவு திட்டத்திற்கு அப்பாற்பட்டது.

### மருத்துவ உதவி

கடுமையான நோயால் பாதிக்கப்படும் ஏழை நோயாளிகளுக்கு உதவிபுரியும் வகையில் ஒரு சங்கம் அமைக்கப் படும். இது அவர்களுக்கு சிகிச்சைக்காக நிதி உதவியை அளிக்கும்.

### 14 வயது வரை கட்டாய கல்வி

இவ்வாட்சிப்பரப்பில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் ஆரம்பக் கல்வி அளிக்க ஒருமித்த முயற்சிகள் தேவை. உச்சநீதிமன்றம் கல்வி உரிமையை அடையாளம் கண்டு, இதற்கு சட்டத்தை கொண்டு வரவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது பற்றி உறுப்பினர்களுக்குத் தெரியும். விரைவில் 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு கல்வியை கட்டாயமாக்க சட்ட வரைவு கொண்டு வரப்படும்.

### விஞ்ஞான ஆராய்ச்சி

இவ்வாட்சிப்பரப்பிற்கு உகந்தவாறு விஞ்ஞான ஆராய்ச்சியை மேம்படுத்த மாநில விஞ்ஞான ஆராய்ச்சிக்குழு ஒன்றை நாங்கள் அமைத்துள்ளோம்.

இவ்வாறு கவர்னர் உரையில் கூறப்பட்டுள்ளது.

## சென்னையை தகர்க்கும் சதி திட்டம் முறியடிப்பு 100 கிலோ குண்டுகள் பறிமுதல் மேலும் 6 பேர் சிக்கினர் கிணற்றில் இருந்து பெட்டி பெட்டியாக வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டது

இதுகுறித்த விபரம் வருமாறு:–

கடந்த 17–ந் தேதியன்று கோடம்பாக்கம் பகுதி தெருவில் சக்தி வாய்ந்த பாக்ஸ் வெடிகுண்டுகளுடன் அல்–உம்மா இயக்கத்தைச் சேர்ந்த சம்சுதீன் மற்றும் பெண் தீவிரவாதி ஆரிஸ்பேகம் உட்பட 6 பேரை சென்னை நகர போலீசார் சுற்றி வளைத்து கைது செய்தது தெரிந்ததே.



### போலீஸ் விசாரணை

இவர்களில் சம்சுதீன் மனைவி ஆரிஸ்பேகம் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

மற்ற 5 தீவிரவாதிகளையும் 17–ந் தேதியன்று சைதாப்பேட்டை கோர்ட்டில் ஆஜர்படுத்தி 21–ந் தேதி வரை போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டது.

அதேபோல போலீஸ் விசாரணை முடிந்து மீண்டும் அந்த 5 பேர் 21–ந் தேதி கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டனர். தலைமறைவாகியுள்ள ஆயிஷாபேகம் அவரது கணவன் மற்றும் 20 தீவிரவாதிகள் சக்திவாய்ந்த வெடிகுண்டுகளுடன் தலைமறைவாகி இருப்பதாகவும், அவர்கள் இருப்பிடம் இந்த 5 பேருக்கு மட்டுமே தெரியும் என்பதால் அவர்களிடம் விசாரணை நடத்தி அவர்களைப் பிடிக்க வேண்டும்.

### காவல் நீடிப்பு

எனவே 5 பேருக்கும் மேலும் போலீஸ் காவல் நீட்டிக்க வேண்டும் என்றும் வழக்கு விசாரணை நடத்தி வரும் கோடம்பாக்கம் இன்ஸ்பெக்டர் வீரபாண்டியன் கோர்ட்டில் தெரிவித்தார். அவர்கள் வாக்கு மூலத்தை அடுத்து 29–ம் தேதி வரை தீவிரவாதிகள் 5 பேரையும் போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க 17–வது பெருநகர மாஜிஸ்திரேட் அலமேலு நடராஜன் உத்தரவிட்டார்.

### திடுக்கிடும் தகவல்கள்

அந்த 5 தீவிரவாதிகளிடமும் சென்னை நகர போலீசார் துருவித்துருவி விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்த விசாரணையின்போது பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தீவிரவாதிகள் 5 பேரிடமும் நடத்தப்பட்ட விசாரணை தொடர்பாக சென்னை நகர போலீஸ் கமிஷனர் பி. காளிமுத்து நேற்று நிருபர்களுக்கு பேட்டியளித்து கூறியதாவது:–

### ஏரியில் வெடிகுண்டுகள்

போலீஸ் விசாரணையில் உள்ள அல்–உம்மா இயக்கத்தைச் சேர்ந்த பஷீர் கொடுத்த தகவலின் அடிப்படையில் தாம்பரத்தை அடுத்த கிஷ்கிந்தா பொழுதுபோக்கு பூங்கா அருகே உள்ள கல்லோடை என்ற இடத்தில் தண்ணீரில் வீசப்பட்டிருந்த தலா 25 கிலோ எடையுள்ள 2 வெடிமருந்து பார்சல்கள் கைப்பற்றப்பட்டது.

அதேபோல பெருங்களத்தூரை அடுத்த ஆயப்பாக்கம் ஏரியில் 50 கிலோ எடை கொண்ட வெடிமருந்து பார்சலையும் போலீசார் கைப்பற்றினர்.

இரண்டு இடங்களில் கைப்பற்றப்பட்ட வெடிமருந்துகள் அனைத்தும் தண்ணீரில் கிடந்ததால் ஏற்கனவே செயல் இழந்துவிட்டது.

### 2 சூட்கேஸ்களில் டைம் பாம்கள்

கடந்த 14–ந் தேதி கோவையில் நடந்த குண்டுவெடிப்பு சம்பவத்தை அடுத்து போலீசாரின் கெடுபிடி, நெருக்கடி தேடுதல் வேட்டை காரணமாக கடந்த 19.2.98 அன்று மேற்படி வெடிமருந்து பார்சல்களை ஏரியிலும், ஓடையிலும் வீசிவிட்டதாக தீவிரவாதி பஷீர் தெரிவித்துள்ளார். மேலும் கடந்த பிப்ரவரி 9–ம் தேதியன்று 2 சூட்கேஸ்களில் டைம் பாம்களை சைக்கிளில் எடுத்துவந்தபோது போலீஸ்காரர் பிடித்தவுடன் அப்படியே போட்டுவிட்டு தப்பிய நபர் நான்தான் என்று தீவிரவாதி பஷீர் போலீசிடம் தெரிவித்துள்ளார்.

### மேலும் 6 பேர் கைது

தீவிரவாதிகளிடம் நடத்தப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதில் தாஜூதீன் அல்-உம்மா இயக்கத்தின் துணைத் தலைவர், தாம்பரம் ரங்கநாதபுரத்தில் இவர்கள் தங்கியிருந்தனர்.

**கிணற்றில் பெட்டிகள்**

இவர்கள் கொடுத்த தகவலின் பேரில் அதே பகுதியில் கிணறு ஒன்றிலிருந்து மோட்டார் சைக்கிளில் வைக்கக் கூடிய காலி வெடிகுண்டு பாக்ஸ் ஒன்றும் கிணற்றில் இருந்து 2 பாக்சும் ஒரு கடையிலிருந்து 3 பாக்சும் கைப்பற்றப்பட்டது.

மேலும் புளியந்தோப்பு பீக்காஸ் ரோட்டில் பிலால் என்பவரது வீட்டில் உள்ள கிணற்றில் போலீசார் சென்று தீயணைப்பு துறை உதவியுடன் சோதனை நடத்தி கிணற்றில் போட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த மொத்தம் 3 கிலோ எடையுள்ள வெடிமருந்துகளுடன் கூடிய வெடிகுண்டு பாக்ஸ்களை போலீசார் கைப்பற்றினர்.

இதுதொடர்பாக பிலால் மற்றும் சிராஜூதின் என்கிற ஜாகிர் உசேன் ஆகியோரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**சென்னை நகரை தகர்க்க திட்டம்**

தற்போது காவலில் உள்ள தீவிரவாதிகளிடம் விசாரித்ததில் கோவையில் நடந்த குண்டுவெடிப்பு சம்பவத்தன்று பொதுக் கூட்ட மேடையருகே அநாமதேயமாக வெடிகுண்டுகளுடன் இருந்த காரை நிறுத்தியவர்கள் சம்சுதீன், சர்புதீன் ஆகிய இருவரும்தான் என தெரியவந்தது.

இது தொடர்பாக சம்சுதீன் மற்றும் சர்புதீனிடம் விசாரணை நடந்து வருகிறது.

தலைமறைவாகியுள்ள சங்கீதாவும் (ஆயிஷா), அவரது கணவர் முகமது இப்ராஹிம், ஏர்வாடி காசிம் ஆகியோரையும் போலீசார் தீவிரமாக தேடி வருகிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.

சென்னை நகரைத் தகர்க்கத் திட்டமிட்டு கோவையில் இருந்து கொண்டு வரப்பட்ட 150 கிலோ எடைகொண்ட சக்திவாய்ந்த வெடிமருந்துப் பொருட்கள் போலீசாரால் பறிமுதல் செய்யப்பட்டு 12 தீவிரவாதிகளைக் கைது செய்ததில் இருந்து தீவிரவாதிகளின் திட்டம் முறியடிக்கப்பட்டது.

## ராஜீவ் கொலை சதியில் ஈடுபட்ட 26 பேரின் தூக்கு தண்டனைக்கு சுப்ரீம் கோர்ட்டு தடை

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை சதியில் தொடர்புடைய விடுதலைப்புலிகள் உள்பட 26 பேருக்கு சென்னை சிறப்பு நீதிமன்றம் விதித்த தூக்கு தண்டனைக்கு சுப்ரீம் கோர்ட்டு இடைக்கால தடை விதித்து உள்ளது.

## பா.ஜ.க. கூட்டணி அரசு மதசார்பின்மையை காக்கும் அமைச்சர் பெர்னாண்டஸ்

பா.ஜ.க. கூட்டணி அரசின் தேசிய செயல் திட்டம் நாட்டின் மதசார்பின்மையை கடைபிடிக்கும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் பெர்னாண்டஸ் கூறியுள்ளார்.



பிரதமர் வாஜ்பாய் தனது பா.ஜ.க. கூட்டணி அரசிற்கு நம்பிக்கை கோரும் தீர்மானத்தை மக்களவையில் நேற்று தாக்கல் செய்தார். அதனை ஆதரித்து அமைச்சர் பெர்னாண்டஸ் பேசினார். அப்போது அவர், காங்கிரஸ் கட்சியையும், ஐக்கிய முன்னணி கட்சிகளையும் கடுமையாக தாக்கி பேசினார். அந்தக் கட்சிகள் மதசார்பின்மையைப் பற்றி கவலைப்படவில்லை. அதிகாரத்தை கைப்பற்றுவதில்தான் அக்கறை கொண்டுள்ளன என்று கூறினார்.

**மம்தா பானர்ஜி**

பா.ஜ.க. கூட்டணியை சேர்ந்த திரிணாமூல் காங்கிரஸ் கட்சி தலைவர் மம்தா பானர்ஜி நம்பிக்கை தீர்மானத்தை ஆதரித்து பேசுகையில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படவும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் தமது கட்சி, பா.ஜ.க. கூட்டணி அரசுக்கு ஆதரவு அளிக்கும் என்றும் கூறினார்.

பாபர் மசூதி பிரச்சனை பற்றி கூறுகையில், கடந்த சிலஆண்டுகளாக பாபர் மசூதி இடிப்பு வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் உள்ளது என்றும் இந்த வழக்கில் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பை பா.ஜ.க. கூட்டணி அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார்.

## புதுவை பட்ஜெட்டில் விதவை மறுமணத்திற்கு ரூ.7 ஆயிரம் உதவி இலவச மதிய உணவு திட்டம் 10-ம் வகுப்புவரை நீடிப்பு பத்திரிகையாளருக்கு ரூ.20 ஆயிரம் நிதியுதவி

புதுவைக்கு சிறப்பு மாநில அந்தஸ்து வழங்க புதிய மத்திய அரசுடன் தொடர்ந்து வலியுறுத்த எங்களது அரசு உறுதி பூண்டுள்ளது.

**மின்விசை**

காரைக்காலில் உள்ள வாயு மின்விசைத்திட்டம் முடியும் தருவாயில் உள்ளது. இந்த ஆண்டு ஜூன் மாத இறுதிவாக்கில் மின்சாரம் தயாரிக்கப்படும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். ஒரு குடிசைக்கு ஒரு மின்விளக்கு என்னும் திட்டத்தின்கீழ் குடிசைக்கு சொந்தக்காரரே மின்கம்பி முதலிய சாதனைங்களை பொருத்திவிட்டு மின்துறையை அணுகினால் அவருக்கு மின் இணைப்பு கொடுக்கப்படும். இதனால் மின்துறை மின்கம்பிகளை அமைத்திடும் வரையில் காத்திருக்க தேவையில்லை. துறைக்கும் செலவு குறையும். ஒரு குடிசைக்கு ஒரு மின்விளக்கு திட்டத்தின்கீழ் வரும் ஆண்டில் 1,200 இணைப்புகள் வழங்கப்படும்.

தனியார்துறை மின் தயாரிப்பில் ஈடுபடுவதை ஊக்குவித்தலும் வணிகத்துறையான மின்துறையின் நடைமுறைகளை சீராக்குவதும் பரிசீலனையில் உள்ளது.

குப்பைகளை விரைவில் அகற்றிட 10 வாகனங்கள் வரும் ஆண்டில் வாங்கப்படும். காரைக்காலில் திருநள்ளாறு சாலையில் ஒரு புதிய மொத்த வியாபார அங்காடி வளாகம் கட்ட நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெறுகிறது.

ஊசுடு ஏரிக்கு அருகில் ஒரு சுற்றுலா மையத்திற்கு ரூ.10 லட்சம் அளவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. மீன் வளம்

தேங்காய்திட்டில் உள்ள மீன்பிடித்துறைமுகத்திற்கு அணுகு சாலையின் பணிகள் முன்னேறி வருகின்றன. படகுவழித்துறையின் பிரதான பணிகள பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மீனவர்களிடையே வீர உணர்ச்சியை பெருக்கும் பொருட்டும், கடல் பயணத்திற்கு திறனை அதிகப் படுத்திடவும், ஆண்டுக்கு ஒரு முறை கடலில் நீந்தும் போட்டியும், கட்டுமரம் இழுக்கும் போட்டியும் நடத்தப்படும்.

புதிதாக துவங்கும் தொழிற்சாலைகளுக்கு 1.4.98-க்குப் பிறகு மேலும் 5 ஆண்டுகளுக்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்குமாறு நாங்கள் நடுவண் அரசிடம் கேட்டுக்கொண்டுள்ளோம். புதுவையில் உள்ள கைவினைத் தொழிலாளர்களின் கூட்டுறவு அமைப்பான புதுமை என்னும் விற்பனைப்பிரிவு ஒன்றை நாங்கள் திறந்துள்ளோம். குபேர் சாலையில் அமைந்துள்ள இந்த விற்பனைப் பிரிவில் பல்வேறு நினைவுப்பரிசு பொருட்கள், பல்வேறு கூட்டுறவுகளின் பொருட்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் பொருட்களும் விற்கப்படும்.

நமது இந்தியக் குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் ஆசியுடன் பாரத் ரத்னா டாக்டர் அம்பேத்கருக்கு நினைவு மண்டபம் ஒன்று திறக்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரத்னா டாக்டர் அம்பேத்கருக்கு நினைவு மண்டபம் ஒன்று திறக்கப்பட்டது.

**சுகாதாரம்**

கோரிமேட்டில் மகாத்மா காந்தி பல்மருத்துவக் கல்லூரிக்கான கட்டிடப்பணிகள், பொதுமருத்துவ மனையில் புதிய வளாகம், காரைக்காலில் மகப்பேறு மருத்துவமனை மற்றும் சி.டி.ஸ்கேன் கருவி அமைத்தல் ஆகிய பணிகள் நல்ல முன்னேற்றம் அடைந்து வருகின்றன. இவ்வாறு பட்ஜெட்டில் கூறப்பட்டுள்ளது.

## தமிழகத்தை தகர்த்திட கோளாவில் உருவான திட்டம் கோர்ட்டில் போலீஸ் அதிகாரி வாக்கு மூலம்

கோடம்பாக்கம் மசூதி தெருவில் வாடகை வீட்டில் பதுங்கியிருந்த அல்–உம்மா அம்மைபைச் சேர்ந்த சம்சுதீன் உள்ளிட்ட 6 தீவிரவாதிகளையும் போலிசார் கடந்த 17–ந் தேதி கைது செய்து அவர்களிடமிருந்து சக்திவாய்ந்த வெடிகுண்டுகளை பறிமுதல் செய்தது தெரிந்ததே. தற்போது போலீஸ் காவலிலுள்ள சம்சுதீன், பஷீர் உள்ளிட்ட 5 பேரும் பல்வேறு திடுக்கிடும் தகவல்களை போலீஸ் விசாரணையின்போது தெரிவித்துள்ளதாக தெரிகிறது.

புளியங்தோப்பிலுள்ள வீட்டிலிருந்து வெடிகுண்டுகள் எடுக்கப்பட்டது தொடர்பாக பிலால் என்பவரையும் போலிசார் கைது செய்தனர்.

பெரவள்ளூர் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த இந்த 8 பேரையும் போலிசார் சைதாப்பேட்டை கோர்ட்டுக்கு பலத்த பாதுகாப்புடன் கொண்டு வந்தனர்.

வழக்கை விசாரித்து வரும் கோடம்பாக்கம் போலீஸ் இன்ஸ்பெக்டர் கி.வீரபாண்டியன் 17–வது பெருநகர மாஜிஸ்திரேட் அலமேலு நடராஜன் முன்பு 8 தீவிரவாதிகளையும் ஆஜர்படுத்தினார்.

தீவிரவாதிகளில் தாஜீவுதீன், சாகுல் அமீது, யாகூப் ஆகிய மூவரையும் 10 நாள் போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி வழங்க வேண்டும் என்று கோரி போலீஸ் இன்ஸ்பெக்டர் கி.வீரபாண்டியன் மனு தாக்கல் செய்து வாக்கு மூலம் அளித்து கூறியதாவது:-

தங்கள் முன்பு ஆஜர்படுத்தப்பட்டுள்ள எதிரிகள் 8 பேர் மீது வெடிகுண்டு தொடர்பாக கோடம்பாக்கம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இவர்களில் தாஜீவுதீன், சாகுல் அமீது, யாகூப் ஆகிய மூவரையும் 10 நாள் போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க கோர்ட்டு அனுமதி வழங்கவேண்டும்.

எதிரி தாஜீவுதீன் அல்–உம்மா அமைப்பின் துணைத் தலைவர் ஆவார். இவர் கேரளாவில் தடை செய்யப்பட்ட பப்ளிக் டெமாகிரடிக் என்ற அமைப்பின் நிர்வாகியான மதானி என்பவருடன் தொடர்பு வைத்துள்ளார் என்பதும், கோவையில் நடந்த குண்டுவெடிப்பு சம்பவங்கள் தொடர்பான திட்டங்கள் எல்லாம் கேரளாவில் தீட்டப்பட்டுள்ளது என்பதும், அந்த திட்டங்களை தாஜீவுதீன் தான் அங்கு சென்று வாங்கி வந்துள்ளதாகவும் தெரிய வருகிறது. தாஜீவுதீனை, பாஷாதான் அனுப்பி வைத்துள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாகவும், வெடிகுண்டுகள் தொடர்பாகவும் மேலும் விசாரித்து தலைமறைவாகியுள்ள சில எதிரிகளை கைது செய்ய வேண்டியிருப்பதால் மேற்படி மூன்று எதிரிகளை போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி வழங்கிடவேண்டும்.

இவ்வாறு போலீஸ் இன்ஸ்பெக்டர் கி.வீரபாண்டியன் வாக்குமூலம் கொடுத்துள்ளார்.

## தெலுங்குதேசம் ஆதரித்ததால் நம்பிக்கை வாக்கெடுப்பில் வாஜ்பாய் அரசு வெற்றி ஆதரவு – 274 எதிர்ப்பு – 261

மத்தியில் வாஜ்பாய் தலைமையிலான பாரதிய ஜனதா அரசு பொறுப்பேற்றுள்ளது. இந்த அரசுக்கு அ.தி.மு.க., பா.ம.க., ம.தி.மு.க., ராஜீவ் காங்கிரஸ், சிவசேனா, திரிணாமுல் காங்கிரஸ், பிஜூ ஜனதா தளம், ஜனதா உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு அளித்துள்ளன.

**நம்பிக்கை தீர்மானம்**

வாஜ்பாய் அரசுக்கு பெரும்பான்மை இல்லாததால், 29–ந் தேதிக்குள் பாராளுமன்றத்தில் மெஜாரிட்டியை நிரூபிக்க வேண்டும் என்று ஜனாதிபதி கே.ஆர்.நாராயணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

**விவாதம்**

இதைத் தொடர்ந்து தீர்மானம் மீது விவாதம் நடந்தது.

**வாக்கெடுப்பு**

பிரதமர் வாஜ்பாய் பதிலளித்து பேசியபிறகு, நம்பிக்கை கோரும் தீர்மானத்தை சபாநாயகர் பாலயோகி வாக்கெடுப்புக்கு விடுத்தார்.

**வெற்றி**

8.50 மணியளவில் சபாநாயகர் பாலயோகி முடிவுகளை அறிவித்தார். அரசுக்கு ஆதரவாக 274 ஓட்டுகளும் எதிர்த்து 261 ஓட்டுகளும் விழுந்ததாக தெரிவித்தார். நம்பிக்கை தீர்மானம் வெற்றி பெற்றதாக அறிவித்தார்.

தெலுங்கு தேச எம்.பி.க்கள் 11 பேரும் அரசுக்கு ஆதரவாக ஓட்டுப்போட்டனர். தேசிய மாநாடு கட்சி உறுப்பினர்கள் 2 பேரும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. நியமன உறுப்பினர்கள் இருவரும் அரசுக்கு ஆதரவாக ஓட்டு போட்டனர்.

தெலுங்கு தேச உறுப்பினர்கள் அரசை ஆதரித்து ஓட்டுப்போட்டதால் வாஜ்பாய் நம்பிக்கை ஓட்டெடுப்பில் வெற்றி பெற்றார்.

## சென்னையில் தொடர்ந்து 75 கிலோ வெடிகுண்டு பறிமுதல் ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் கைது வெடிகுண்டு பெண்

## ஆயிஷாவுக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் சென்னையில் தீவிரவாதிகள்

கோவை குண்டு வெடிப்பு சம்பவங்களை அடுத்து சக்திவாய்ந்த வெடிகுண்டுகளுடன் அல்–உம்மா இயக்கத்தைச் சேர்ந்த முஸ்லிம் தீவிரவாதிகள் 6 குழுக்களாக 25 பேர் சென்னை நகருக்குள் ஊடுருவி விட்டதாக தகவல்கள் வெளியாயின. சென்னை நகரை தகர்த்திட அந்த தீவிரவாதிகள் திட்டமிட்டு இருப்பதாகவும் செய்திகள் வெளியானது.

இதைத் தொடர்ந்து சென்னை நகர போலீசார் தேடுதல் வேட்டையில் தீவிரமாக ஈடுபட்டனர். கடந்த 17–ந் தேதி கோடம்பாக்கம் மசூதி தெருவில் வாடகை வீட்டில் பதுங்கியிருந்த ஆரிஸ்பேகம், இவரது கணவர் சம்சுதீன் உள்ளிட்ட 6 பேரை போலீசார் சுற்றி வளைத்து கைது செய்தனர். அவர்களிடமிருந்து சக்தி வாய்ந்த 45 கிலோ எடைக் கொண்ட டைம்பாம்களையும், வெடிமருந்து உள்ளிட்ட பொருட்களையும் போலீசார் பறிமுதல் செய்தது தெரிந்ததே.

கைது செய்யப்பட்ட 6 பேரில் ஆரிஸ் பேகத்தை தவிர மற்ற 5 பேரும் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு தற்போது போலீஸ் காவலில் வைத்து விசாரிக்கப்பட்டு வருகிறார்கள்.

போலீஸ் காவலிலுள்ள சம்சுதீன், பஷிர் ஆகியோர் கொடுத்த தகவலின்பேரில் பெருங்களத்தூர் அருகே உள்ள ஆரியபாக்கம் ஏரியிலிருந்து 50 கிலோ வெடிமருந்து பார்சல், தாம்பரத்திலுள்ள ஒரு நீரோடையில் இருந்த தலா 25 கிலோ எடை கொண்ட வெடிமருந்து பார்சல்களையும், புளியந்தோப்பில் பிலால் என்பவரது கிணற்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 3 கிலோ வெடிமருந்து கொண்ட 11 பாக்ஸ் வெடிகுண்டுகளையும் வியாழக்கிழமையன்று (26–ந் தேதி) போலீசார் கைப்பற்றினார்கள் என்பதும் தெரிந்ததே.

**தீவிர விசாரணை**

இது தொடர்பாக பஷீர் கொடுத்த தகவலின் பேரில் 26–ந் தேதியன்றே தாம்பரம் ரங்காநாதபுரத்தில் பதுங்கியிருந்த அல்–உம்மா அமைப்பின் துணைத் தலைவரான தாஜூவுதீன் மற்றும் புளியாந்தோப்பிலுள்ள பிலால், அல்–உம்மா தலைவரான பாஷாவிற்கு உதவியாக இருந்ததாக கூறப்படும் ஜாகீர் உசேன் உள்ளிட்ட 8 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

இந்த 8 பேர் மீதும் கோடம்பாக்கம் போலிசாரால் வழக்குப் பதிவு செய்யப்பட்டு நேற்று முன்தினம் சைதாப்பேட்டை 17–வது பெருநகர மாஜிஸ்திரேட் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களில் தாஜ்வுதீன், யாகூப், சாகுல் அமீது ஆகிய மூவரையும் 8 நாள் போலீஸ் காவலில் வைத்து விசாரித்திட மாஜிஸ்திரேட் அலமேலு நடராஜன் அனுமதி வழங்கினார். மற்ற 5 பேரையும் வரும் 31–ந் தேதி வரை நீதிமன்றக் காவலில் வைக்கும்படியும் மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். அதன்படி அந்த 5 பேரும் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போலீஸ் காவலிலுள்ள தாஜீவுதீனிடம் விசாரணை மேற்கொண்டபோது தலைமறைவாகியுள்ள முகமது இப்ராகிம். இவரது மனைவி ஆயிஷா மற்றும் ஏர்வாடி காசிம் ஆகிய மூவரும் கடைசியாக அரும்பாக்கத்திலுள்ள ஒரு வீட்டில் வாடகைக்கு குடியிருப்பதாக தெரியவந்தது.

இந்த தகவலின் அடிப்படையில் அரும்பாக்கம் ஆற்றங்கரையை யொட்டியுள்ள (பூந்தமல்லி நெடுஞ்சாலை) முத்துமாரியம்மன் கோயில் தெருவிலுள்ள எண்: 551-ன் 38-ம் நெம்பர் மாடி வீட்டில் திடீர் சோதனை நடத்த போலீசார் வந்தனர்.

இந்த வீட்டின் கீழ்பகுதியில் வீட்டின் உரிமையாளர் அபுபக்கர் (வயது 55). அவரது மனைவி பாத்திமா பீவி (வயது 50). மூத்த மகள் காதர் பீவி, மருமகன் சையத் ஹாசன் மற்றும் 3 மகள், 4 மகன்கள் வசிக்கிறார்கள். போலீசார் வந்ததை அறிந்தவுடன் எல்லோரும் அதிர்ச்சி அடைந்தனர்.

அ.தி.மு.க. பிரமுகர்

பின்னர் போலீசார் வீட்டை சோதனை போட்டனர். அவர்கள் தங்கியுள்ள வீட்டில் வெடிகுண்டுகள் எதுவும் சிக்கவில்லை. பிறகு முதல் மாடியிலுள்ள வீட்டிற்கு சென்றனர்.

வீட்டின் கதவு பூட்டப்பட்டிருந்தது. சாவி எங்கே என்று பாத்திமா பீவியிடம் போலீசார் கேட்டனர். சாவி இல்லை என்றும் வாடகைக்கு இருந்தவர்கள் எடுத்துச் சென்றுவிட்டதாகவும் தெரிவித்தார். பிறகு பூட்டை உடைத்து போலீசார் வீட்டிற்குள் புகுந்தனர்.

வீட்டின் உள்ளே ஏராளமான செய்தித் தாள்களும், 6 பெட்டிகளும் இருந்தது. வேறு எதுவும் வீட்டில் இல்லை. சூட்கேஸ் பெட்டிகளை பார்த்தவுடன் போலீசார் உஷாராகி மெட்டல் டிடெக்டர் மூலம் சோதித்தபோது சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் எனத் தெரியவந்தது.

இதையடுத்து உயர் போலீஸ் அதிகாரிகளுக்கு தகவல்கள் பறந்தன. இதற்கிடையே வீட்டின் உரிமையாளர் பாத்திமா பீவி, அவரது கணவர் அபுபக்கர், மகள் காதர் பீவி, மருமகன் சையத் ஹாசன் ஆகிய 4 பேரை போலீசார் கைது செய்து மேல் விசாரணைக்காக ஜெ.ஜெ.நகர் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றனர்.

முஸ்லிம் தீவிரவாதிகள் தங்கியிருந்த வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சூட்கேஸ், பிளாஸ்டிக் பேக், மோட்டார் சைக்கிள் பாக்ஸ் உட்பட 6 பெட்டிகளுடன் கூடிய வெடிகுண்டுகள், டைம்பாம்களை போலீசார் பத்திரமாக முதல் மாடியிலிருந்து கீழே இறக்கி பரிசோதனைக்காகவும், அவற்றை செயல் இழக்க செய்வதற்காகவும் அங்கிருந்து எடுத்துச் சென்றனர்.

கைது செய்யப்பட்ட வீட்டின் உரிமையாளர் பாத்திமா பீவி பற்றி பல தகவல்கள் போலீஸ் விசாரணையில் தெரியவந்தது. அரும்பாக்கம் 66-வது வட்ட அ.தி.மு.க.வின் மகளிர் அணி தலைவியாக பாத்திமா பீவி பணியாற்றி வருகிறார் என்றும், இவரது வீட்டின் நடந்த சில நிகழ்ச்சிகளுக்கு அ.தி.மு.க.வின் முக்கிய பிரமுகர்கள் வந்து கலந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் அதற்கான புகைப்படங்கள் இருப்பதாகவும், வீட்டிற்குள் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதாவின் புகைப்படத்தை வைத்திருப்பதாகவும் போலீசார் தெரிவித்தனர்.

திடீர் வசதி

பாத்திமா பீவியின் கணவர் அபுபக்கர் தனியார் கம்பெனி ஒன்றில் வாட்ச்மேனாக இருப்பதாகவும், இவர்களுக்கு 4 மகள், 4 மகன்கள் இருப்பதாகவும் போலீசார் தெரிவித்தனர். சொந்த வீட்டில் வசித்து வரும் பாத்திமா பீவிக்கு 2 டாங்கர் லாரி மற்றும் ஒரு மாருதி வேன், ஒரு ஆட்டோ ரிடா ஆகியவை இருப்பதாகவும், லாரிகளை இரண்டு மகன்கள் ஓட்டி வருவதாகவும் போலீசார் தெரிவித்தனர்.

கடந்த 17-ந் தேதி கோடம்பாக்கம் மசூதி தெருவில் போலீசார் நடத்திய சோதனையின்போது சம்சுதீன் உள்ளிட்ட 6 பேர் சிக்கினார்கள். இவர்களுடன் தங்கியிருந்த மனித வெடிகுண்டாக திரியும் ஆயிஷா. இவரது கணவர் முகமது இப்ராகிம் மற்றும் ஏர்வாடி காசிம் ஆகிய மூவரும் ஏற்கனவே அதாவது மார்ச் 8-ந் தேதியே வீட்டிலிருந்து தப்பி விட்டதாக தெரிந்தது.

அதே தினத்தன்று அரும்பாக்கத்திலுள்ள வீட்டு புரோக்கர் முத்து என்பவர் மூலம் முகமது இப்ராகிம், ஆயிஷா, ஏர்வாடி காசிம் ஆகியோர் பாத்திமா பீவி வீட்டிற்கு வாடகைக்கு வந்துள்ளனர். அட்வான்ஸ் ரூ.15 ஆயிரமும் கொடுத்துள்ளனர். வாடகை மாதம் ரூ. ஆயிரத்து 500 தருவதாகவும் பேசியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

பத்திரிகைகளில் தினமும் இவர்களைப் பற்றி செய்திகள் வந்து கொண்டிருந்ததாலும், போலீசாரின் கிடுக்கிபிடி ஆயிஷாவையும், முகமது இப்ராகிமையும் நெருங்கி கொண்டிருந்ததால் அரும்பாக்கம் வீட்டிலிருந்து மெல்ல தப்பிட இவர்கள் முடிவு செய்து 25-ந் தேதியன்று அந்த வீட்டிலிருந்து தப்பிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

உண்மை தெரிந்தும் உதவி செய்தார்

அந்த வீட்டிலிருந்து செல்வதற்கு முன்பு முகமது இப்ராகிம் என்று கருதப்படும் தீவிரவாதி வீட்டை பூட்டிக் கொண்டு சாவியை மட்டும் பாத்திமா பீவியிடம் கொடுத்து விட்டுச் சென்றதாக கூறப்படுகிறது. சாவியை கொடுக்கும்போது எங்கே போகிறீர்கள் என்று பாத்திமா பீவி கேட்டதாகவும், திருச்சியிலுள்ள தனது சகோதரி பாத்ரூமில் சறுக்கி விழுந்து இறந்துவிட்டார். எனவே நான் போகிறேன் என்று அந்த தீவிரவாதி கூறியதாகவும் பாத்திமா பீவி போலீசாரிடம் தெரிவித்துள்ளார்.

தினமும் ஆயிஷா பற்றி பத்திரிகைகளில் வந்த செய்தியை பாத்திமா பீவி பார்த்துள்ளார் என்றும், தனது வீட்டில் குடியிருப்பவர்கள் அந்த தீவிரவாதிகள்தான் என தெரிந்தபிறகு அவர்களை வீட்டை விட்டு வெளியே போக வேண்டாம் என்று அவர் சொல்லியதாகவும் தெரிகிறது. இது குறித்தும் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

அரும்பாக்கம் முத்துமாரியம்மன் தெருவில் கடந்த பல ஆண்டுகளாக வசித்து வரும் பாத்திமா பீவி முதலில் மிகவும் ஏழ்மையாக இருந்தார் என்றும், கடந்த சில ஆண்டுகளாகத்தான் அவருக்கு வசதிகள் வந்தது என்றும், புதிதாக வீடு கட்டியுள்ளார் என்றும் அரும்பாக்கம் ஆற்றங்கரையிலுள்ள புறம்போக்கு நிலத்தையெல்லாம் வளைத்து விற்று வந்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

அந்த தெருவிலிருக்கும் பெண்கள் பாத்திமா பீவி வீட்டை கடந்து போகும்போது சாதாரணமாக திரும்பி பார்த்தால் கூட என்னங்கடி என் வீட்டு மீது கண்ணு வைக்கிறீங்க என்று சத்தம் போடுவாராம்.

பர்தா பெண் யார்?

கடந்த சில தினங்களாக பாத்திமா பீவி வீட்டிற்கு யமகா மோட்டார் சைக்கிளில் ஒரு வாலிபர் ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு வருவதும் போவதுமாக இருந்தார் என்றும் அந்த பெண் பர்தா (கருப்பு அங்கி) போட்டிருந்தார் என்றும், அந்த தெருவிலுள்ள சிலர் நேற்று போலீசாரிடம் தெரிவித்துள்ளனர்.

சக்திவாய்ந்த வெடிகுண்டுகளை பாத்திமா பீவி வீட்டிலேயே விட்டு தப்பிச் சென்ற தீவிரவாதிகள் தலைமறைவாகியுள்ள ஆயிஷா மற்றும் அவரது கணவர் முகமது இப்ராகிம், ஏர்வாடி காசிம் தான் என போலீசார் வலுவாக சந்தேகித்துள்ளனர். அவர்களை பிடிப்பதற்கான தேடுதல் வேட்டை வலையையும் வீசியுள்ளனர்.

## சூப்பர் கம்ப்யூட்டரில் சாதனை ஆசியாவிலேயே இந்தியா முதலிடத்தை பிடிக்கிறது அமெரிக்காவிற்கும் பலத்த அடி

சூப்பர் கம்ப்யூட்டர் தயாரிப்பில் இந்தியாவின் திறனை கட்டுப்படுத்த அமெரிக்கா மேற்கொண்ட முயற்சியை இந்தியா தோற்கடித்துள்ளது என இந்த சூப்பர் கம்ப்யூட்டரை தயாரித்த நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் விஜய்பத்கார் தெரிவித்தார்.

ஜிகாப்லோப்ஸ் பராம் 10000 என்ற அந்த சூப்பர் கம்ப்யூட்டரை சென்டர் பார் டெவலப்மெண்ட் ஆப் அட்வான்ஸ்டு கம்ப்யூடிங் (சி.டி.ஏ.சி.) என்ற நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டதாகும். இதன் நிர்வாக இயக்குனர் விஜய்பத்கர் ஆவார். இவர் இந்தியாவின் சூப்பர் கம்ப்யூட்டர் புரட்சிக்கு தலைமை தாங்கியவர் என கூறப்படுபவர். ஜிகாஸ்லோப்ஸ் பராம் 10000 சூப்பர் கம்ப்யூட்டரை தொடக்கிவைக்கும் நிகழ்ச்சியில் எலக்ட்ரானிக் துறை செயலாளர் சியாமல் கோஷ் உட்பட எலக்ட்ரானிக் நிபுணர்கள் கலந்துகொண்டனர்.

அமெ.வின் தடை

இந்த நிகழ்ச்சியில் பேசிய விஜய்பத்கர் சிக்கலான பிரச்சினைகளுக்கு தீர்வுகாணக்கூடிய உயர்மட்ட திறன் கொண்ட கம்ப்யூட்டர்களை இந்தியா தயாரிக்க முடியும். இந்த நம்பிக்கையை பராம் 10000 சூப்பர் கம்ப்யூட்டர் ஏற்படுத்தியுள்ளது என்று கூறினார்.

உயர் செயல்பாடு கொண்ட கம்ப்யூட்டர்களை இந்தியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அமெரிக்க ஜனாதிபதி கிளிண்டன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விதித்த தடையின் பின்னணியில் இந்த சூப்பர் கம்ப்யூட்டர் தயாரிக்கப் பட்டதாகும் என்றும் கூறினார்.

நவீன நுட்பங்களுடன் இந்த சூப்பர் கம்ப்யூட்டர் தயாரிக்கப்பட்டதாகும். விண்வெளி ஆராய்ச்சி மருத்துவ ஆராய்ச்சி உட்பட பல்வேறு துறைகளில் பயன்படுத்தக்கூடியதாகும்.

இந்த கம்ப்யூட்டரின் முக்கிய சாதனைகளில் ஒன்று வெளிநாடுகளிலிருந்து கிடைக்காத தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் இந்த கம்ப்யூட்டர் நம்பிக்கை அளிக்கும் என்பதாகும்.

## தி.மு.க. அரசு கலைப்பு இல்லை வாஜ்பாய் அறிவிப்பு ஜெயலலிதாவுக்கு ஏமாற்றம்

எந்தக்காரணத்தைக் கொண்டும் தி.மு.க. அரசு கலைக்கப்படாது என்று மாநிலங்களவையில் உரை நிகழ்த்திய போது வாஜ்பாய் அறிவித்தார்.

### ஜெயலலிதா கோபம்

இதன்மூலம் ஜெயலலிதா மறுபடியும் வாஜ்பாயிடம் தமிழக அரசை கலைக்க நிர்பந்தம் செய்ய முயற்சிக்கலாம் என்பதை தவிர்த்ததாக குறிப்பாக தெரிகிறது. இதனால் ஜெயலலிதா மிகவும் . ஏமாற்றம் அடைந்தததாக தெரிவித்தனர்.

## இந்தியாவிலேயே ஐ.எப்.எஸ்.தேர்வில் முதலிடம் பெற்ற மாணவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்

இந்தியாவிலேயே ஐ.எப்.எஸ். (இந்திய வனத்துறை) தேர்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்த வனக்கல்லூரி மாணவர் முதல் மதிப்பெண் பெற்று சாதனை புரிந்துள்ளார்.

### இதன் விவரம் வருமாறு:–

### வனக் கல்லூரி மாணவர்

தமிழ்நாட்டில் தேனி மாவட்டம் கம்பம் நகரில் வசிக்கும் வீ.ராமசுப்பிரமணியன் (வயது 28) என்பவர் மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் படித்து, கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி செய்தார். பின்னர் மதுரையில் நடந்த இந்திய வனத்துறைக்கான (ஐ.எப்.எஸ்.) தேர்வில் கலந்து கொண்டு தேர்வு எழுதினர். இங்கு மொத்தம் 33 பேர் கலந்து கொண்டனர்.

### தேசிய அளவில் முதலிடம்

தேர்வு முடிவில் ராமசுப்பிரமணியன், தேசிய அளவில் முதலிடம் பெற்று சாதனை புரிந்துள்ளார். இவருக்கு உத்தரபிரதேச மாநிலம் டேராடுனில் உள்ள இந்திராகாந்தி நேசனல் பாரஸ்ட் அகாடமியில் 3 ஆண்டுகள் பயிற்சி கொடுக்கப்படும்.

தேசிய அளவில் முதலிடம் பெற்ற இவரை பல பிரமுகர்கள் பாராட்டியுள்ளனர்.

## அழகி பவுலா ஜோன்ஸ் தொடர்ந்த கிளிண்டன் மீதான செக்ஸ் வழக்கு தள்ளுபடி

அமெரிக்காவில் உள்ள ஆர்கான்சாஸ் மாநில கவர்னராக பில் கிளிண்டன் பொறுப்பேற்றிருந்தபோது, அவரோடு அழகி பவுலா ஜோன்சும் பணியாற்றினார். பில் கிளிண்டன் அமெரிக்க ஜனாதிபதியானவுடன் அழகி பவுலா ஜோன்ஸ் அவர் மீது ஆர்கான்சாஸ் மாவட்ட கோர்ட்டில் வழக்கு ஒன்றைத் தொடர்ந்தார்.

### புகார்

பவுலா ஜோன்ஸ் புகாரில் உண்மை எதுவும் இல்லை. கிளிண்டன் தவறாக நடந்து கொண்டார் என்பதை நேரில் கண்டதற்கான சாட்சிகளும் இல்லை. எனவே பவுலா ஜோன்சின் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என கிளிண்டன் வக்கீல் வாதாடினார்.

### மனு தள்ளுபடி

இந்த வழக்கில் நேற்று தீர்ப்பு கூறப்பட்டது. தீர்ப்பில் கூறியிருப்பதாவது:–

கிளிண்டன் உறவுக்குத் தன்னை அழைத்தார் என பவுலா ஜோன்ஸ் புகார் கூறியுள்ளார். ஆனால் அதற்கு ஆதாரமான சாட்சியங்களையும், மருத்துவ சான்றிதழ்களையும் கோர்ட்டில் தாக்கல் செய்யப்படவில்லை. அதேபோல் இயற்கைக்கு மாறாக உறவுக்கு உடன்பட மறுத்ததால் பணியில் இடையூறு ஏற்பட்டதாகக் கூறிய புகாருக்கும் சரியான ஆதாரங்களைக் கோர்ட்டில் சமர்ப்பிக்கவில்லை.

பவுலா ஜோன்ஸ் பணி தொடர்பான தஸ்தாவேஜ்களை பார்க்கும்போது, அவருக்கு வழக்கமாக வழங்கப்படவேண்டிய சம்பள உயர்வு முறையாக வழங்கப்பட்டு வந்திருக்கிறது. கிளிண்டன் மீதான குற்றச்சாட்டுக்குப் பிறகும் பவுலா மேம்பாட்டு கமிஷனில் பணிபுரிந்து வந்திருக்கிறார். இதுதவிர பவுலா ஜோன்ஸ், கிளிண்டன் தன்னிடம் தவறாக நடந்து கொண்டார் என்பது குறித்து எந்தவித புகாரும் கூறவில்லை. தனதுமேலதிகாரிகளிடமும் முறையிடவில்லை.

ஓட்டல் அறைக்கு அழைத்தார் என்பதற்காக அதையே செக்ஸ் சித்ரவதையாக கருதிவிட முடியாது.

அதுமட்டுமல்லாமல் பொறுப்பான பதவியில் இருப்பவர் இதுபோன்ற காரியங்களில் ஈடுபடுவார் என்பதை ஏற்கமுடியாது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது என நீதிபதி தனது தீர்ப்பில் கூறினார்.

இது குறித்து வெள்ளை மாளிகையில் இருந்த கிளிண்டனிடம் தெரிவிக்கப் பட்டது. முதலில் நம்ப மறுத்த அவர் என்னை ஏப்ரல் முட்டாள் ஆக்குகிறீர்களா என சிரித்துக கொண்டே தமது வக்கீலிடம் கேட்டார். ஆனால் தீர்ப்பு உண்மைதான் என்று கூறப்பட்டதும் அவர் மகிழ்ச்சி அடைந்தார்.

இவ்வழக்கு மாவட்ட கோர்ட்டில் தள்ளுபடி செய்யப்பட்டாலும் பவுலா ஜோன்ஸ் மேல்முறையீடு செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பவுலா ஜோன்ஸ் வழக்கிலிருந்து கிளிண்டன் தப்பினாலும், வழக்கு எதுவும் தொடராத மோனிகா செக்ஸ் விவகாரம் விசுவரூபம் எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## Une réplique du Titanic

Un groupe d'investisseurs américains et suisses projettent de construire une réplique du Titanic, et de lancer le navire à l'occasion du 90e anniversaire du voyage initial qui s'était terminé par le naufrage du célèbre paquebot en avril 1912 (1 500 morts), . Le coût de la construction de cette copie grandeur nature est estimé à environ 500 millions de dollars, selon le journal. Les investisseurs projettent de faire monter à bord de nombreuses célébrités - qui pourraient payer des billets allant de 10 000 dollars à 100 000 dollars - et de lancer le paquebot le 15 avril 2002 sur le même itinéraire, poursuit le quotidien.

Mais le nouveau Titanic « ne pourra pas couler », assure Walter Navratil, président de l'entreprise conceptrice du projet basée en Suisse, selon le Post. Le paquebot « aura le même aspect, mais sera adapté aux normes modernes », dit-il cité par le quotidien.

Une fois achevé son périple entre Southampton (Grande-Bretagne) et New York, le nouveau Titanic effectuera des croisières.

## Moderniser la politique

Deux jours après les manifestations contre l'extrême droite, Jacques Chirac entame des consultations sur la modernisation de la vie politique, en pleine controverse sur les alliances droite-FN. Au menu de cette « grande réflexion » avec les leaders des formations politiques : la réforme des lois électorales, les cumuls, la



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

grande réflexion » avec les leaders des formations politiques : la réforme des lois électorales, les cumuls, la place du référendum, le rôle des femmes. Les présidents de l'Assemblée nationale et du Sénat, Laurent Fabius et René Monory, ont ouvert la série des entretiens.

## Automobile : BMW va s'offrir Rolls-Royce

Le constructeur automobile allemand BMW sera bientôt propriétaire des marques britanniques de luxe Rolls-Royce et Bentley. Mais pour faire de cette reprise un succès, BMW va devoir dépenser des sommes énormes pour remettre sa future filiale à flot.



## ரூ.1 1/2 கோடி செலவில் புதுவையில் மேம்பாலம் முதல்வர் ஜானகிராமன் அடிக்கல் நாட்டினார்

புதுவை மறைமலையடிகள் சாலை ராஜீவ் காந்தி பஸ் நிலையம் எதிரில் மேம்பாலம் அமைக்கும் பணியில் அடிக்கல் நாட்டு விழா நடந்தது.

## மத தீவிரவாதத்தை எதிர்க்க முஸ்லிம் அமைப்புகள் ஓரணியில் நிற்க வேண்டும் தமிழ் மாநில தேசிய லீக் அறிக்கை

தமிழ்நாட்டில் மதத்தீவிரவாதத்தை வேரறுக்க சிறுபான்மை மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என தமிழ் மாநில தேசிய லீக். ஜனநாயக அமைப்புகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தேசிய லீக் வெளியிட்டுள்ள கூட்டு அறிக்கை விவரம் வருமாறு:-

மன்னிக்க முடியாத குற்றவாளிகள்

தமிழ்நாட்டில் பொது அமைதியைக் கெடுக்கும் கேடும் கெடுமதியும் நிறைந்த வஞ்சக சதிச்செயல் களையும்-வன்முறைக் கலாச்சாரத்தையும் தடுத்து நிறுத்திட தமிழக அரசு மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளும் வெற்றிபெறும் வகையில் பொதுமக்களும், குறிப்பாக இஸ்லாமியப் பெருமக்களும் முஸ்லிம் சமுதாய அமைப்புகளும் தங்களுடைய தார்மீக ஆதரவைத் தரவேண்டும் எனவும் தீவிரவாதத்திற்கு எதிராக முஸ்லிம்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கருத்தொற்றுமையின் அடிப்படையில் முஸ்லிம் ஜனநாயக அமைப்புகள் ஓரணியில் நின்று செயல்பட வேண்டுமெனவும் தமிழ் மாநில தேசிய லீக் வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறது.

எந்த மத தீவிரவாதத்தையும் ஆதரிக்கக் கூடிய அரசும், மக்களும் தமிழ்நாட்டில் இல்லை.

இயல்பாகவே சகோதர வாஞ்சையைப் பெற்றிருக்கும் தமிழ் மண்ணில் மதத் தீவிரவாதமென்னும் பெயரில் அப்பாவி முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆசை காட்டி மோசமான கொடுஞ் செயல்களுக்கு அவர்களைப் பக்குவப்படுத்துபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மன்னிக்க முடியாத குற்றவாளிகள் ஆகும். இத்தகைய செயல்களுக்கும், மலிவான துவேஷங்களுக்கும் இஸ்லாமிய சன்மார்க்கத்தில் அங்கீகாரம் இல்லவே இல்லை.

குறிக்கோள்

இத்தகைய மரபு மீறிய செயல்களை வேரறுக்கும் வகையில் தொன்று தொட்டு தொடரும் தமிழக முஸ்லிம்களின் பாரம்பரியத்திற்கு முற்றிலும் மாறுபட்ட, ஏற்றுக்கொள்ள முடியாத தீவிரவாதத்திலிருந்து முஸ்லிம் இளைஞர்கள் விடுபடும் வகையில் சிறுபான்மை மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்திடும் முயற்சியில் முஸ்லிம் அமைப்புகள் ஜனநாயக வழியிலகருத்தொற்றுமையின் அடிப்படையில் ஓரணியில் ஒன்றுபட்டுச் செயல்பட வேண்டும். தீவிரவாதத்தை மாய்ப்பதே-அனைவருடைய குறிக்கோளாகவும் இருந்திடல் வேண்டும்.

தமிழகத்தின் பொது அமைதியைக் கெடுக்கும் தீயநோக்கமும்-பரவலாக பீதியை ஏற்படுத்தும் தீவிரவாத வஞ்சக செயல்களும் அரசுக்கும் சமூக நலனுக்கும் எதிரான ஆழமான சதித்திட்டமாகும். இதற்கான ஆணிவேரைக் கண்டறிவதில் அரசு மேற்கொள்ளும் விவேகமான நடவடிக்கைகளே அச்சத்திலிருந்தும், அபாயத்திலிருந்தும் மக்களைக் காப்பாற்ற உதவும். இதனை அனைவரும் உணர்ந்து அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்குப் பொது நோக்கோடு துணை நிற்க வேண்டும்.

அரசுக்குத் துணை நிற்கவும் அனைவரும் ஓரணியில் நின்று செயல்பட வேண்டும் என்பதே தமிழ் மாநில தேசிய லீக்கின் வேண்டுகோளாகும்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## வாஜ்பாயும் 13-ம் நம்பரும்

வருகிற 19-ந் தேதி பிரதமராகப் பதவியேற்க இருக்கும் வாஜ்பாய்க்கும், 13-ம் நம்பருக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது.

முதன்முதலாக பிரதமராக பதவியேற்ற அவர் 13 நாட்களே அந்த பதவியில் இருந்தார். தற்போது மீண்டும் அந்தப் பதவிக்கு இந்தியாவின் 13-வது பிரதமராக பதவியேற்க உள்ளார்.

மறைந்த பாரதப்பிரதமர் நேரு அவர்களால் உன்னதமான உயர்ந்த ஒரு பதவி வகிப்பாய் என்று ஆசிர்வதிக்கப்பட்ட வாஜ்பாய் 1926-ம் ஆண்டு ஒரு ஆசிரியரின் மகனாக குவாலியரில் கிறிஸ்துமஸ் தினமான டிசம்பர் 25-ந் தேதி பிறந்தார்.

மற்ற அரசியல்வாதிகளால் சுத்தமானவர் என்று அழைக்கப்படும் வாஜ்பாய், 1942-ல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்ற அவருக்கு அரசியல் குரு சியாம பிரசாத் முகர்ஜி. இந்து மகாசபைத் தலைவரான முகர்ஜி, நேருவின் முதல் அமைச்சரவையில் அங்கம் வகித்தவர்.

1951-ல் பாரதிய ஜனசங்கத்தை முகர்ஜி ஆரம்பித்தபோது, அதன் நிறுவன உறுப்பினர்களில் ஒருவராக இருந்தவர் வாஜ்பாய். கிட்டத்தட்ட அதே சமயத்தில்தான் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்துடன் அவருக்குத் தொடர்பு ஏற்பட்டது.

1957-ல் முதல்முறையாக மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட வாஜ்பாய், பிறகு இரு அவைகளிலும் மாறி மாறி அங்கம் வகித்து வந்திருக்கிறார்.

1968-ல் பாரதிய ஜனசங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு ஐந்தாண்டுகள் அப்பதவியில் நீடித்தார்.

இந்திரா காந்தியின் அவசரநிலைப் பிரகடனத்துக்குப் பிந்தைய தேர்தலில், ஜனதாவின் வெற்றிக்கும் ஆட்சி அமைப்பதற்கும் வாஜ்பாய் முக்கியப் பங்காற்றினார். ஜனதா அரசாங்கத்தில் வெளியுறத்துறை அமைச்சராக இரண்டாண்டுகள் பணியாற்றினார்.

அப்போது இந்தியா-பாகிஸ்தான் உறவு மேம்படுவதற்காக கடும் முயற்சிகள் எடுத்தார். 1978-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பொதுசபையில் முதன்முதலாக இந்தி மொழியில் உரையாற்றி மக்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றார்.

1980-ல் பாரதிய ஜனதா கட்சியின் தலைவராகத் தேர்வு பெற்று 6 ஆண்டுகள் அப்பொறுப்பை வகித்தார். 93-ல் மக்களவை பாரதிய ஜனதா கட்சியின் தலைவராகப் பொறுப்பு ஏற்று எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தார்.

96 தேர்தலுக்குப் பிறகு பிரதமரானார். எனினும் பெரும்பான்மை பலம் இல்லாததால் பாரதிய ஜனதா கட்சி அரசு 13 நாள்களுக்கு மேல் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

இந்தியாவின் 10-வது பிரதமராக 13 நாட்களே பதவி வகித்த வாஜ்பாய், கடந்த மக்களவைத் தேர்தலில் பொதுமக்களின் ஆதரவுடன் மீண்டும் 13-வது பிரதமராக பொறுப்பேற்கிறார்.

71 வயது நிறைந்த வாஜ்பாய், நெருங்கி நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வட்டாரத்தில் பாப்ஜி என்றே அழைக்கப்படுகிறார். பாப்ஜிக்கு, சமைக்கப் பிடிக்கும்

www.tamilarangam.net



## சிறந்த நடிகர்-நடிகை தேர்வு: சரத்குமார்-மீனாவுக்கு வீடியோகான் விருது சிறந்த படம் - பாரதிகண்ணம்மா

ஸ்கிரீன் - வீடியோகான் இணைந்து வழங்கும் சிறந்த நடிகர் விருது சரத்குமாருக்கும், சிறந்த நடிகை விருது மீனாவுக்கும் வழங்கப் படுகிறது. சிறந்த படமாக பாரதி கண்ணம்மா தேர்வு செய்யப் பட்டுள்ளது.

### சரத்குமார் - மீனா

இந்த ஆண்டுக்கான சிறந்த நடிகராக சரத்குமாரும், சிறந்த நடிகையாக மீனாவும் தேர்வு செய்யப் பட்டுள்ளனர். திரையுலகில் நீண்ட காலம் இருப்பதற்காக ஜெமினி கணேசன் மற்றும் ஷீலாவுக்கு சிறப்பு விருது வழங்கப்படுகிறது.

மேலும் தாதாசாகேப் பால்கே விருது பெற்ற சிவாஜிகணேசனுக்கு பாராட்டும் வகையில் சிறப்பு விருது வழங்கப்படுகிறது.

### பாரதிகண்ணம்மா

தமிழில் சிறந்தபடமாக பாரதிகண்ணம்மா தேர்வு செய்யப்பட்டுள்ளது. சிறந்த டைரக்டராக விக்ரமன் (சூர்யவம்சம்) தேர்வு செய்யப்பட்டுள்ளார். விருது பெற்ற மற்றவர்கள் விவரம் வருமாறு: சிறந்த இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் (மின்சார கனவு). தெலுங்கில் சிறந்த நடிகராக சிரஞ்சீவியும், சிறந்த நடிகையாக விஜயசாந்தியும் தேர்வு பெற்றுள்ளனர். சிறந்த கன்னட நடிகராக ரமேஷ் அரவிந்தும், சிறந்த நடிகையாக சுகாசினியும் தேர்வு செய்யப்பட்டனர்.

### மோகன்லால்

சிறந்த மலையாள நடிகராக மோகன்லாலும், மலையாள நடிகையாக மஞ்சுவாரியரும் தேர்வு செய்யப்பட்டனர். சிறந்த மலையாள டைரக்டராக ராஜீவ்அஞ்சல் தேர்வு செய்யப்பட்டார்.



உற்சாகமாய் இருக்கிறது விஜயக்குமார் குடும்பம். இவர்களின் குடும்பத்து கலைவாரிசுகளில் ஒன்றுகூட இதுவரை தேறியது இல்லை.வனிதாவும், அருண்குமாரும் தன் கலைச் சேவையை முடித்துக் கொள்ளும் நிலைமையிலிருக்க, இளையவரானப்ரீத்தா கிட்டதட்ட 10 படங்களை கைவசம் வைத்துள்ளார். தாராள்மாகக் கவர்ச்சியை வழங்குவதால் அப்பா ஸ்தானத்து நடிகர்கள் கூட ஜோடி சேர்ந்திருக்கிறார்கள்.



பெயருக்கு முன்னால் ஜெய என்ற வார்த்தையை சேர்த்துக் கொண்டால் வெற்றிக் கிடைக்கும் என்று ஜோதிடர் சொன்னாரோ என்னவோ சுவாதி இப்பொது ஜெயசுவாதி ஆகிவிட்டார். இப்போது மலயாளப் படங்களில்டைட்டில் கார்டில் அப்படித்தான் தோன்றுகிறார் சுவாதி. தவணை முறையில் கார் வாங்கிவிட்டு செலுத்த முடியாமல் அவதிப்பட்டவர். த்ற்போது நாளொருமேன் பொழுதொரு வண்ணமாய் ஜொலித்து வரிகிறார். எல்லாம் ஜெயமயம் வாழ்க ஜோதிடர்

❀❀❀

கும்பகோணம் கோபாலு.. தர்மா என்று ஒரே நேரத்தில் மூன்று படங்களை இயக்கிவருகிறார் டைரக்டர் கேயார். ஒவ்வொருபடத்தின் கதையையும் விலாவாரியாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்



ரம்பாவின், ஷூட்டிங் சென்னையிலிருந்தால் அவருடைய மதிய உணவை வீட்டிலிருந்து எடுத்து வரச்சொல்லி சாப்பிடுகிறார். அதில் ஊர்வன..பறப்பன.; மிதப்பன என்று சகலமும் நிறைந்திருக்கும் அந்த உணவு யாருக்கு போகிறதென்று எல்லாருக்கும் குழப்பம். காரணம் ரம்பா சாப்பிடுவது காலையில் 2இட்லி, மதியம் 10கிராம் அரிசிச் சாப்பாடு.. இரவு ஒரே ஒரு சப்பாத்தி இவ்வளவுதான். இதற்குமேல் சாபிட்டால் உடம்பு உப்பிவிடும் என்பதால் அதுதான் அவரின் மெனு. நிலமை இப்படியிருக்க, மேற்படி அயிட்டத்தை யார் சாப்பிடுகின்றார்கள் என்று அறிந்து கொள்ளும் ஆசையில் ஒருவர் நைசாகா பாலோ செய்ததில் அதிர்ச்சி அடைந்து விழாதகுறை.. அந்த சாப்பாடெல்லாம் ரம்பாவின் நாய்களுக்காம்.



முக்கால்வாசி படபிடிப்பு முடிந்த நிலையில் இருக்கிறது மோகனின்அன்புள்ள காதலுக்கு... மேகா, பாவனா, ரசிகா என்று மூன்று ஹீரோயின்கள். தன் பழைய செல்வாக்கு இளையராஜாவை வைத்துத்தான். என்பதை ஒப்புக் கொள்ளும் மோகன் இந்தப் படத்தில் தேவாவை இசை அமைக்க வைத்துள்ளார்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கேஎஸ் ரவிக்குமார் இயக்கும் படம் நட்புக்காக.. சரத், சிம்ரன் நடிக்கும் இந்தப் படத்தில் ஆரம்பத்தில் சிவாஜி கணேசனும் நடிப்பதாக இருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் நடிக்க முடியாது என்று சொல்லிவிட்டார். சரத் திமுக சார்பாக தேர்தலில் நின்றதுதான் காரணமாம்..



இயக்குனர் சேரனின் பாரசீக ரோஜா கிடப்பில் போடபட்டு, அதற்குப் பதிலாக அதே நிறுவனத்துக்காக தேசிய கீதம் என்ற படத்தை இயக்கிவருகிறார். மீனாவுக்கும் இவருக்கும் காதல் என்கிர வதந்தியை ஒழிக்க வேண்டும் என்பதற்காக ரம்பாவை ஹீரோயினாகப் போட்டிருக்கிறார் சேரன்.

சமீபத்தில் மீனாவைப் பார்க்கப் போன ஒரு பத்திரிகையாளரை உலுக்கி எடுத்துவிட்டார் மீனா. பாரதி கண்ணம்மா, பொற்காலம் இரண்டும் எவ்வளவு நல்ல படம்..எனக்கு ரொம்ப நல்ல பேர் வாங்கிக் கொடுத்தது. ஆனால் நீங்க எல்லாம் சேர்ந்து எனக்கும் சேரனுக்கும் காதல்னு எழுதி அவரோட படத்தில் வாய்ப்பில்லாம பண்ணீட்டிங்க. அவரு இப்ப வேற ஹீரோயினத்தேடறாரு, ல்லாத்துக்கும் காரணம் நீங்கதான். . இனிமே உங்களைப் பார்க்கப் போறதில்ல.. குட் பை! என்று சொல்லிவிட்டு உள்ளே போய்விட்டாராம்.



நடிகை சங்கீதாவை மிகவும் நேசித்தார் பார்த்திபன். சங்கீதாவின் பிறந்த நாளொன்று போஸ்டரெல்லாம் கூட அடித்தார். ஆனால், சங்கீதா பூவே உனக்காக படத்தின் கேமிராமேன் சரவணனை காதலிக்கிறாராம். விரைவில் டும்..டும் நடக்க உள்ளது. விஷயம் கேள்விப்பட்டு சோகப் பாடல்களாக கேட்டுக்கொண்டிருக்கிறார்

முழுக்க முழுக்க செட்டி நாட்டு சமுகத்திப் பற்றி ஒரு படம் எடுத்து வருகிறார் மகேந்திரன். படத்தின் பெயர் சாசனம். இதில் அரவிந்தசாமி சம்பளமே பெற்றுக் கொள்ளவில்லையாம்.



சமீபத்தில் பத்திரிகையாளர்களைக் கூப்பிட்டு தனக்கும் சரத்குமாருக்கும் உள்ள உறவு முறிந்துவிட்டதென அறிவித்தார் நக்மா. இப்போது எல்லாம் வெறும் கண்துடைப்புத் தானாம். தேர்தலில் நிற்பதற்கு முன்பே நிற்க வேண்டாம் என்று தடுத்தாராம் நக்மா. அவரின் பேச்சைக் கேட்காமல் நின்று தோற்றுப் போனதால் கோபமான நக்மா உடனே பத்திரிகையாளர்களைக் அழைத்துக் குமுறிவிட்டார். இப்போது மறுபடியும் சமாதானமாகிவிட்டார்கள் என்று கேள்வி.



அண்ணன் படத்தில் ராமராஜனுடன் நடிக்கிறார் சுவாதி. ஆரம்பத்தில் இந்தப் படத்தில் நடிக்க அவரை அணுகியபோது ராமராஜனோடெல்லாம் சேர்ந்து நடித்தால் என் இமேஜ் என்ன ஆவது என்று ரொம்ப பிகு பண்ணிக்கொண்டார். படப்பிடிப்பிலும் வேண்டாவெறுப்பாகக் கலந்து கொண்டார். காலச் சக்கரம் சுழன்றது. ராமராஜன் இப்போது ஒரு எம்.பி.. சுவாதி என்ன செய்தார் தெரியுமா? ராமராஜனுக்குப் போன் செய்து நீங்க எம்.பி. ஆனது எனக்கு எவ்வளவு பெரிய சந்தோஷம்! என்றெல்லாம் ஐஸ் வைத்து உச்ச கட்டமாக தன் பிறந்த நாளன்று ராமராஜன் வந்தால் தான் கேக் வெட்டுவேன் என அடம்பிடித்து ராமராஜனை வரவழைத்தார். இந்த கூத்தை நேரில் பார்த்தவர்கள் தலையில் அடித்துக் கொள்ளாத குறை

சரத்தின் தோல்வி யாரை பாதித்ததோ இல்லையோ, ராமராஜனைரொம்பவும் பாதிதுவிட்டது. அழுதே விட்டாராம்.. சரத்திற்குப் போன் பண்ணி கவலைப் படாதீங்கண்ணே.. என்று ஆறுதல் சொன்னாராம்.மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு.. அது இதுதானோ?



நடிகை ஊர்வசி தமிழ், தெலுங்கு, மலையாளம் என்று இருநூறு படங்களுக்கு மேல் நடித்து விட்டார். திடீரென்று டைரக்ஷன் மீது ஆசை. தற்போது டீ.வி. சீரியல் எடுத்துக் கொண்டிருக்கிரார். இது வண்ணத்திரையில் நுழைவதற்காக எடுத்துக் கொள்ளும் சின்னத் திரை முயற்சிதானே, என்று கேட்டால் நமுட்டு சிரிப்பு சிரிக்கிறார். மனோஜ் கே. ஜெயன் என்ற டைரக்டரை காதலித்துக் கொண்டிருக்கும் ஊர்வசி, திருமணத்திற்குப் பின் டைரக்டர் ஊர்வசியாகலாம்.

எற்கனவே நன்கைந்து முறை மூக்கு ஆபரேஷன் செய்துகொண்ட மகேஸ்வரி பற்கள் அழகில்லாமல் பெரிதும் வருந்தினார். வெளினாடு சென்று தன் பற்களி சீரமைத்துக் கொண்டார். இப்போது தன் உடல் அழகை சரிபடுத்திக் கொள்வதற்காக மீண்டும் வெளினாடு செல்ல திட்டமிட்டுள்ளார்.



டாட்டா, பிர்லா, பூவரசன் போன்ற படங்க்ளில் கதாநாயகியாய் நடித்தவர் ரச்சனா. அந்தப் படங்கள் சுமாராய்த்தான் ஓடியது. எஸ். ஏ சந்திரசேகரனின் சொந்தப் ப்டமான நிலாவே வா படத்தில் விஜய்யோடு நடிக்கப்போகும் இரண்டு கதாநாயகிகளில் ஒருவராக ரச்சனாவைப் போட்டார்கள். இன்னொரு நாயகி சுவலட்சுமி. படப்பிடிப்பில் எனென கசமுசாவோ. இப்போது ரச்சனாத் தூக்கப்பட்டு அந்த இடத்தில் சங்கவி. தமிழ் நாட்டில் கண்டைடத்தில் குண்டு வெடிக்கிறது. இந்தப் படத்தில் கவர்ச்சி குண்டுவெடிக்கப் போகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





சிம்ரனுக்கு கால்ஷீட் பார்த்து வந்தவர் முனுசாமி என்பவர். ஒரே நேரத்தில் மூன்று தயாரிப்பாளர்களுக்கு கால்ஷீட் கொடுத்துவிட்டாராம். அவர்களும் ஷூட்டிங் வைத்துவிட்டு வருவார் வருவார் என்று காத்துக் கிடக்க சிம்ரனோ மூன்று பேருக்கும் டிமிக்கிக் கொடுக்க விளைவு கால்ஷீட் கொடுத்த முனுசாமியைக் கந்தலாக்கிவிட்டனர். தன் பங்குக்கு சிம்ரனும் முனுசாமியை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்.



இந்திப்பட இயக்குனர் ராம் கோபால் வர்மாவுக்கும் ஊர்மிளாவுக்கும் லவ்ஸ் என்று நாடே வம்பளத்து கொண்டிருக்கிறது அதனால்தானோ என்னவோ தன்படமான சத்யாவில் ஊர்மிளாவை அடக்க ஒடுக்கமாக காட்டியிருக்கிறார். விரைவில் இந்தப் படம் தமிழில் மொழிமாற்றம் செய்யப்பட்டு வர இருக்கிறது

## top ten பாடல்'கள்

1. ஹைரோ.. ஹைரோ ஹைரப்பா
படம்: ஜீன்ஸ்
இசை: ஏ.ஆர். ரஹ்மான்

2. தீவானா தீவானா டீன் ஏஜ்
படம்: துள்ளத் திரிந்த காலம்
இசை: ஜெயந்த்

3. என்னைத் தாலாட்ட வருவாளா
படம்: காதலுக்கு மரியாதை
இசை: இளையராஜா

4. இந்தச் சிரிப்பினை
படம்: நாம் இருவர் நமக்கு இருவர்
இசை: கார்த்திக்ராஜா

5. தஞ்சாவூருமண்ணெடுத்து
படம்: பொற்காலம்
இசை: தேவா

6. என் வானம் நீதான்
படம்: தினந்தோறும்
இசை: ஒவியன்

7. பேருவச்சதாரு
படம்: கொண்டட்டம்
இசை: கீரவாணி

8. பூ மலர்ந்திட தேன்
படம்: சொர்ணமுகி
இசை: ஸ்வரராஜ்

9. கங்கை நதியே
படம்: காதலே நிம்மதி
இசை: தேவா

10. மனம் பந்தாடுதே
படம்: உதவிக்கு வரலாமா
இசை: சிற்பி

## *தமிழ்ப் புத்தாண்டு (ஏப்ரல் 14ந்தேதியன்று) வரயிருக்கும்புதிய படங்கள்*



1. ஜீன்ஸ்
பிரசாந்த், ஐஸ்வர்யா



2. காதலா.. காதலா..
கமல், பிரபுதேவா, ரம்பா, சௌந்தர்யா

3. சுந்தர பாண்டியன்
கார்த்திக், சுவாதி

4. வீரத் தாலாட்டு
முரளி, ராஜ்கிரண், குஷ்பூ, வினிதா

5. நினைத்தேன் வந்தாய்
விஜய், ரம்பா, தேவயானி

6. அண்ணன்
ராமராஜன், சுவாதி


7. கவலைப் படாதே சகோதரா
பாண்டிய ராஜன், சுவலட்சுமி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Nila Tamil Bi-mestrial mars - avril 1998



ஆசிரியரும் வெளியிடுபவரும்
நாகரத்தினம் கிருஷ்ணா
38, boulevard Balzac
67200 STRASBOURG

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்